


கீதாசார்யன்

# கீதாசார்யன்-29

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்



தொகுதி 3 | ரௌத்ரி ௵ | மாசி ௴ | பிப் 81 | பகுதி 5



ஆசிரியர்:

M. A. வேங்கடகிருஷ்ணன், M A., M Phil.

**இயக்குநர் குழு :**

**N. கணபதி**
விற்பனை இயக்குநர்

**R. ரவிச்சந்திரன்**
பொதுத் தொடர்பு இயக்குநர்

**P. T ஸ்ரீனிவாசன்**
நிர்வாக இயக்குநர்

**ஆலோசகர் குழு :**

சாண்டில்யன் (தலைவர்)
K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்
Dr. V. V ராமாநுஜம்
S. வேங்கடகிருஷ்ண பட்டாச்சாரியர்
K. E. B. ரங்கராஜன்

7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை-600 005.

★

தனி இதழ்விலை
ஒரு ரூபாய்
வருடச்சந்தா ரூ 12/-



வேளுக்குடி ஸ்வாமியும் சதாபிஷேகம் ஸ்வாமியும்

# வித்வான்களுக்கு வேண்டுகோள்



உலகம் புகழும் உத்தம வித்வானாய் எழுந்தருளியிருந்தவர் ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு வேங்கடாசாரியர் ஸ்வாமி. மற்ற எந்த வித்வானுக்கும் இல்லாத தனிச் சிறப்பு ஒன்று இவருக்குண்டு. அது, தமக்குப் பின்பும் இவ்வுலகில் வைணவ நெறிகளைப் பரப்ப, திக்கஜங்கள் போல் சிஷ்யர்களை உருவாக்கிச் சென்றிருப்பதுதான்.

தம்முடைய ஆசார்யரைப் போலவே, பிரவசனங்கள் செய்து வைணவத்தைக் காத்து வரும் சிஷ்யர்களில், ஸ்ரீ. உ. வே. சதாபிஷேகம் கோவிந்த நரசிம்மாசாரியர் ஸ்வாமிக்கும், ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமிக்கும் தைமாதம் உலகம் வியக்கும் வகையில் ஷஷ்டியப்த பூர்த்தி விழா நடைபெற்றிருக்கிறது. இவ்விழா வைணவர்களனைவரது நெஞ்சிலும் நீங்காத இடத்தைப் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

மற்ற எல்லாவிதத்திலும் தமது ஆசார்யரைப் பின்பற்றிப் பிரவசனங்கள் மூலம் வைணவத்தைப் பரப்பிவரும் இவர்கள், சிஷ்யர்களை உருவாக்குவதிலும் தம்முடைய ஆசார்யருடைய அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டும் என்று வைணவர்கள் அனைவருடைய சார்பிலும் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

உலகின் எல்லாத் துறைகளிலும் இளைஞர்கள் உற்சாகமுடன் பிரவேசித்து அடுத்த தலைமுறை பற்றிய கவலையை அகற்றி வருகிறார்கள். ஆனால் ஸம்ப்ரதாயத்தைப் பொறுத்த வரையில் இது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

இக்கேள்விக்குறியை ஆச்சரியக் குறியாக மாற்றும் பொறுப்பு மூத்த வித்வான்கள் கையில்தான் இருக்கிறது. அதை அவர்கள் செய்துவிட்டால் அதுவே அவர்களுடைய ஷஷ்டியப்த பூர்த்திக்கு உண்மையான ஞாபகார்த்தமாக அமையும்.

திருவஹீந்திரபுரத்தில் எழுந்தருளியிருக்கும் வேதாந்த தேசிகன் அர்ச்சாவிக்ரஹம் தேசிகனுலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பது அனைவரும் அறிந்தது. மன்வியசிர் மார்கழித்திருவோணத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்ற இந்த அர்ச்சாவதார உத்ஸவம் இவ்வருடமும் சிறப்பாக நடைபெற்றது. விசேஷமாக, திருமலை திருவேங்கடமுடையானின் பகுமானமாக உடுத்துக்களைந்த பீதகவண்ணவாடை (சுமார் 5000 ரூ மதிப்புள்ளது) T T Dன் சார்பில் ஸ்வாமி தேசிகனுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது.

**D. ஆராவமுதன்**

★

ஸ்ரீ உ. வே. P. K ஸ்ரீராமய்யங்கார் ஸ்வாமியின் சதாபிஷேகம் 19-12-80 அன்று திருவல்லிக்கேணியில் எளிமையான முறையில் சிறப்பாக நடைபெற்றது. சுமார் 60 வருடங்களாக ஸ்ரீபார்த்தசாரதிஸ்வாமி ஸன்னிதியில் அத்யாபக கைங்கர்யம் செய்துவரும் அவருடைய சேவையைப் பாராட்டி ஸன்னிதி பாகுானமாக ஸ்ரீபார்த்தசாரதியெம்பெருமானின் உடுத்துக்களைந்த பீதகவாடை போர்த்தப்பட்டது. சில ஆண்டுகளாக கண் பார்வை குறைவாக இருப்பினும் விடாமல் கைங்கர்யத்தில் அன்வயித்து வரும் அவருக்கு நீண்ட ஆயுளையும், கண்பார்வையையும் கொடுத்தருளுமாறு எம்பெருமானின் திருவடிகளில் பிரார்த்திப்போமாக.

**காவல்கழனி ராஜகோபாலன்.**

★

திவ்யப்பிரபந்தம் ஹிந்தியில் மொழி பெயர்க்கப்படுவது பற்றி சென்ற இதழில் வந்துள்ள செய்தியின் விவரம்: தாகூரின் சாந்திநிகேதன் விச்வபாரதி கலாசாலையின் ஆதரவில் புதுக்கோட்டை A ஸ்ரீனிவாஸ ராகவாசாரியார் M A ஹிந்தியில் மொழி பெயர்க்கிறார். முதல் பாகமான பெரியாழ்வார் திருமொழி 5-1-81 அன்று பிரதமர் இந்திராகாந்தியால் டில்லியில் அவரது இல்லத்தில் வெளியிடப்பட்டது.

**M N ஸ்ரீனிவாசன்**

கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அருகிலுள்ள உடையார் பாளையம் வரதராஜப் பெருமாள் கோயிலின் விதானத்தில் ராமாயணச்சித்திரங்கள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இச்சித்திரங்கள் 18வது நூற்றுண்டைச் சேர்ந்தவை என்று தொல்பொருள் துறையினர் கூறுகின்றனர். இதேபோல் திருவெள்ளறை (திருச்சி) பெருமாள் கோயிலின் விதானத்திலும் கம்பராமாயணச் சித்திரங்கள் உள்ளன. இவற்றையும் தொல்பொருள் துறையினர் தமது ஆராய்ச்சிக்குப் பயன் படுத்திக் கொள்ளலாமே.

**விசாகம்**

★

கடவுளின் பெயரால் காமத்தைப் பரப்புவதில் தலைசிறந்தது வைணவமா சைவமா என்று பட்டி மன்றம் நடத்துகின்ற காலத்தே 'ஆழ்வார்கள் கண்ட அகம்' என்ற ஆய்வுக் கட்டுரையை எழுதிய பூ. ஜெயராமன் நமது பாராட்டுக்குரியவராகிருர். இக்கட்டுரை தினமணி நாளிதழின் நேற்றைய பொங்கல் மலரில் (14-1-81) வெளியிடப்பட்டது. இதில் அகத்திணை பற்றிய இலக்கணக் குறிப்புகளைக் காட்டும் ஆசிரியர் ஆழ்வார்கள் அருளிச் செயலுக்கு, ஆசாரியர்களின் உள்ளுறை (ஸ்வாபதேசம்) வியாக்கியானங்களையும் அழகுறஎடுத்துக் காட்டியுள்ளார்.

கட்டுரை ஆசிரியர் ஜெயராமன் அவர்களுக்கும் தினமணி நாளிதழின் ஆசிரியக் குழுவினர்க்கும் எமது நன்றி உரித்தாகுக. அவர்களின் இப்பணி பல்லாண்டு தொடர்க.

★

உஜ்ஜயினி-ஜன-15- மத்திய பிரதேசத்தின் மேற்கு பகுதியில் உள்ள மாண்ட்லாலூர் என்ற கிராமத்தில் விவசாயி ஒருவர் தமது நிலத்தை உழும் போது சுமார் 5 அடி 2 அங்குல உயரமுள்ள விஷ்ணுசிலையொன்றை கண்டெடுத்ததாக இன்று இங்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த சிலை சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்று கூறப் படுகிறது. அந்த விவசாயி, சிலை பற்றிய தகவல்களை உடனடியாக மாவட்ட அதிகாரிகளிடம் தெரிவித்ததாகவும் அந்தகவல்கள் மேலும் தெரிவித்தன. **தினமணி 17-1-81**

K E B **ரங்கராஜன்**

# ஸ்ரீஆசார்யன் பதில்கள்

**S. K. சடகோபன்** உடுமலைப்பேட்டை

### விசிஷ்டாத்வைதத்தின் சுருக்கமான கருத்து என்ன?

அத்வைதம் என்றால் இரண்டாவது இல்லாத ஒன்று என்று பொருள்படும். அத்வைதக் கொள்கையை உருவாக்கிய ஆதிசங்கராசாரியர், "பரம் பொருள் ஒன்றே உள்ளது (உண்மை). நாம் காணும் பல பொருள்களும் நம் அறியாமையினால் உள்ளனவனவாகத் தோற்றுகின்றன." என்று ஸாரமாக உபதேசித்தார். இக்கொள்கைப்படி பரம்பொருள் பெயர், வடிவம், நற்பண்புகள் இவையுடைய எம்பெருமானாக இருக்க இயலாது. விசிஷ்டாத்வைதக் கொள்கைப்படி ஞானம், சக்தி, முதலான கல்யாண குணங்களுடையவனும், அதிஸௌந்தர்யம் உள்ள திருமேனி படைத்தவனும், இவை காரணமாக பல சிறந்த பெயர்களையுடையவனுமான எம்பெருமானே பரம்பொருள். இவ்வுலகங்களைப் படைத்து ரக்ஷித்து அழிக்கும் இவனே காரணப் பொருளாவான். ஸ்ரீமந் நாராயணனே இந்த எம்பெருமான். இவனை யொத்தவனோ மிக்கவனோ இல்லாத தனித்தெய்வமாயுள்ளமையால் இரண்டாவது அற்றவனான (அத்விதீய) பரம்பொருள் (பரப்ரஹ்மம்) இவனே. நாராயணன் என்ற சொல், எல்லா பொருள்களிலும் உட்புகுந்து அவற்றிற்கு உயிராய் நின்று அவற்றை உயிராயுள்ளது போல ஜீவனுக்கும் நாராயணன் உயிராய் இருந்து அதன் ஸத்தையை (உள்ளமையை) நிலைபெறச் செய்கிறான். நாம் காணும் பலபல பொருள்களும் எம்பெருமானின் சரீரங்கள் ஆகையால் இவை எல்லாம் அவனுருவங்களே. பூவும் மணமும் போல எப்போதும் சேர்ந்திருப்பவை. பரமாத்மா சரீரி (உயிர்). ஜீவாத்மாவும் (சித்தும்) ப்ரக்ருதி (நீர், நிலம் முதலானவை); அவனுக்கு, அவனின்றும் பிரியாத விசேஷணங்கள். இப்படி இவற்றுடன் அவன் ஒன்றியுள்ளமையால் **ஒன்று** என்னும் அத்வைதமே விசிஷ்டாத்வைதம்.

**சௌந்தரராஜய்யங்கார்** கோமங்கலம் புதூர்

**சில வைணவர்கள் அம்மனைத் தங்கள் குலதெய்வமாகச் சொல்கிறார்களே இது சரியா?**

ஜீவாத்மா எம்பெருமானுடைய உடைமையானதால் அது அவனுக்கு அடிமைப்பட்டிருக்கும். இது திருமந்திரத்தினுல் நமக்குக் கிடைக்கும் சிறப்பான பொருள். **உனக்கே நாமாட்செய்வோம்** என்று வாழ்க்கைக் குறிக்கோளையும் நாம் அடையவேண்டிய பேற்றையும் ஆண்டாள் காட்டியுள்ளது காண்க. **மறந்தும் புறந்தொழா மாந்தர்** என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆழ்வாரால் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். இப்படி இருக்க, எம்பெருமானை ஸ்ரீமந் நாராயணனையொழிந்த இதர தேவதைகளுக்கு ஆட்பட்டிருக்கை ஸ்ரீவைஷ்ணவத்துக்குத் துளியும் ஒவ்வாது.

---

Cable : BAYAUNT

Tel { Off : 28891
Res : 34227

# WORLD WIDE EXPORTERS

*Delers in :*

HANDLOOM GOODS MANUFACTURERS
EXPORTERS & IMPORTERS

*Bankers :*

**STATE BANK OF INDIA**
**Overseas Branch**
**MADRAS-600001.**

**21, MINT STREET**
**MADRAS-600 001.**
**(S. INDIA)**

# திருவரங்கன் உலா

ஸ்ரீவேணுகோபாலன்

## 7. அரங்கம் வீழ்ந்தது.

விடிய ஒரு முகூர்த்தம் இருக்கும் மேடைகள் சில கட்டி அதன் மீது டில்லிப் படைகள் தங்கள் மஞ்சனிக் யந்திரங்களை ஏற்றி வைத்தார்கள். அவைகளில் முரட்டு அம்புகளைப் பொருத்தி வைத்தார்கள்.

சில கணங்கள் காத்திருந்தபோது, திடீரென்று உத்தரவுகள் வழங்கப் பட்டன உடன் அவர்கள் முதல் கொத்து அம்புகளை கோபுரத்தின் மீது சீற விட்டார்கள்.

பலம் பொருந்திய அந்த அம்புகள் கோபுரத்தின் வெவ்வேறு பகுதிகளை வேகமாகத் தாக்கியதும் அதன் சக்தி தாளாமல் கோபுரத்தின் சுதைப் பகுதிகள் பெரும் ஓசையுடன் கலகலத்து விழலாயின.

''ஒதுங்குங்கள்! ஒதுங்குங்கள்!'' என்று இரைந்து கத்தினார் பஞ்சு கொண்டான். எல்லோரும் பரபரப்புடன் ஒதுங்கினார்கள். அவர்கள் முகமெல்லாம் குப்பென்று வியர்த்தன.

இரு அம்புகள் கோபுரத் துவாரங்களின் வழியே உள்ளே புகுந்து கோபுர உள் அமைப்புகளைப் பலமாகத் தாக்கின. காரைப் பகுதிகள் பெயர்ந்து உடனே கீழே விழலாயின

துவாரத்துக் குள்ளிருந்த பஞ்சு கொண்டானும் குல சேகரனும் குனிந்து ஒதுங்கி இடிபாடுகளிலிருந்து தப்ப வேண்டி வந்தது.

இந்நிலையில் என்ன செய்யலாம் என்று துடித்தபோது தீக்கோளம் ஒன்றைத் தாங்கி வந்த அம்பு ஒன்று முதல் துவாரத்தின் வழியாக உள்ளே சீறிப் புகுந்தது.

''குலசேகரா! சீக்கிரம்! கோபுரத்தை விட்டுக் கீழே இறங்கு!'' என்று கத்தினர் பஞ்சு கொண்டான்

தீக்கோளம் உள்ளே விழுந்து ஒரே அனலை வீசி எரிந்தது அதே நேரத்தில் மேலும் இரண்டு தீக்கணைகள் கோபுர வாயி லின் மரக்கதவில் தைத்துக் கொள்ளவே கதவு அப்படியே திகுதிகுவென்று பற்றி எரிய ஆரம்பித்தது.

வடக்கு வாயிலில் கோபுரத்தின் முதல் தளத்தில் எதிரி யின் தீக்கோளம் விழுந்து பகபகவென்று எரிந்து கொண் டிருந்தது.

இதற்கிடையில் மஞ்சனிக் எறிந்த அம்புகள் பலவும் சீறி வந்து கோபுரத்தைப் புண் படுத்திக் கொண்டே இருந்தன ஆனால் இற்றுப் போன பகுதிகள் எல்லாம் தாக்குதலால் பொடிந்து விழுந்த பிறகு, மேலும் வரும் அம்புகளுக்கு அசைந்து கொடுக்காமல் கோபுரம் திடமாக நிற்க ஆரம்பித்தது.

பிராகாரத்தில் மாறி மாறி விழுந்த கோளங்களை நீண்ட கழிகளால் மெதுவாக நகர்த்தி அங்கங்கே அதற்காகத் தோண்டப் பட்டிருந்த பெரும் குழிகளில் பரிசனங்கள் தள்ளிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது திடீரென்று வெளியே பயங்கரமான பிளிறல் கள் கிளம்பி எழுந்து கோவில் மதில்கள் எங்கும் மோதிக் கொண்டு எதிரொலித்தன.

ஒரு கணம் திடுக்கிட்டு நின்ற குலசேகரனை பஞ்சு கொண்டான் ஏறிட்டுப் பார்த்தார்

'தளராதே குலசேகரா? டில்லிக்காரர்கள் யானைகளை உள்ளே கொண்டு வந்திருக்கிறார்கள் எல்லாவற்றையும் நாம் சமாளிக்கலாம்'' என்று கூறிய அவர் சாரத்தின் அடிப் புறத்தை நோக்கி, 'யார் அங்கே?'' என்று கூவினார்.

பரிவாரங்கள் அனைவரும் கோபுரத்தை நோக்கி, 'சுவாமி! கட்டளையிடுங்கள் நாங்கள் எதற்கும் சித்தமாய் இருக்கிறோம்'' என்று கத்தினார்கள்

பஞ்சு கொண்டான் உடனே ''என் அருமைப் பரிவாரங்களே! உங்களது பலம்தான் என் பலம்! உங்களுடைய தைரியம்தான் என் தைரியம்! நம்மிடம் சக்தி உள்ளவரை போராடுவோம்'' என்று கூவினார்

பிறகு கோவிலுக்குள் இருக்கும் ஜனங்களில் விருப்ப முள்ளோரை போரிட அழைத்து வரும்படி கூறிவிட்டு, ''ஜய ரங்கா! திருவரங்கா!'' என்று கோஷித்துக் கொண்டு களத்துக்குள் ஆவேசத்துடன் பிரவேசித்தார்.

உடன் ''ஜய ரங்கா! திருவரங்கா!'' என்ற வாழ்த்தொலி பிராகாரங்களில் எங்கும் எதிரொலிக்க ஆரம்பித்தது.

போர் உக்கிரமாயிற்று.

ஆரியப் பட்டாள் எனப்படும் வாசல்கள் மிகவும் புராதனமானவை

மூன்றாவது பிராகாரத்தைச் சுற்றியுள்ள நீண்ட மதிலில் தெற்கிலும் வடக்கிலும் இந்த வாசல்கள் இருக்கின்றன. மதிலின் மேற்கிலும் கிழக்கிலும் வாசல்கள் கிடையாது

ஆதிகாலத்திலே வங்கப் பகுதியான கௌட தேசத்தைச் சார்ந்த அரசர் ஒருவர், திருவரங்கத்தின் அருமை பெருமைகளைக் கேள்விப் பட்டு, ஏராளமான திரவியங்களை எடுத்துக் கொண்டு அரங்கனுக்குக் காணிக்கையாக அவைகளைக் கொடுக்க நினைத்து பய பக்தியுடன் வலசையாகப் புறப்பட்டு வந்தார்.

திருவரங்கத்தை அடைந்து, திரவியங்களைக் கொடுக்க முயன்ற போது கோவிலார் அவற்றை உடனே அங்கீகரிக்க வில்லை. மற்ற தேச மக்களைக் கொள்ளை அடித்து அந்தப் பொருள்களை காணிக்கையாகக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்று கோவிலார் ஐயப்பாடு கொண்டிருந்தார்கள்

இவ்விதம் அங்கீகாரம் பெருத பொருள்களையெல்லாம் கௌட அரசர், கோவில் வாசலில் போட்டு வைத்து, அவற்றிற்குக் காவலாக தம் தேசத்தைச் சேர்ந்த ஆரிய அந்தணர்களை வைத்து விட்டு ஊர் போய்ச் சேர்ந்தார் இப்படி ஆரியப் படர்களான அந்தணர்கள் பல காலம் அந்த வாசலிலுள்ள பொருள்களைக் காத்து வந்ததால் அதற்கு ஆரிய படாள் வாசல் என்று பெயர் வந்தது.

இந்த ஆரிய பட்டாள் வாசல்கள்தான் டில்லிப் படைகளின் தாக்குதலுக்கு இலக்காயிருந்தன.

ஆரிய பட்டாள் வெளி வாயிலிலும் இன்னொரு ஆபத்தான நிலை உருவாகிக் கொண்டிருந்தது

கோவிலின் வாசல் கதவுகளை இரு யானைகள் கோபத்துடன் தாக்க ஆரம்பித்திருந்தன.

நெற்றி முகட்டில் நீண்ட பருமனை இரும்பு மழுக்களைத் தாங்கி வந்த யானைகள் ஒன்று மாற்றி ஒன்றாக மடார் மடார் என்று கதவுகளை மோதிக் கொண்டிருந்தன.

அதன் அதிர்ச்சி, கோபுர தளத்தில் உள்ள பஞ்சு கொண்டானையும் அவரது இரண்டு வீரர்களையும் தாக்கி அந்த தளத்தையே ஆட வைத்துக் கொண்டிருந்தது.

பாதுகாப்பு எல்லாம் அழிந்து வருகிறது என்ற உணர்வு பஞ்சு கொண்டானுக்கு விரைவில் புலனாக ஆரம்பித்தது

தமது உத்தரவைக் கேட்பதற்குக் கூட ஆட்கள் இல்லையே என்று உணர்ந்த அவர், என்ன செய்யலாம் என்று யோசிக்கும் வேளையில், யானைகளின் ஆவேசத்திற்கு இலக்கான வாயிற் கதவு மேலும் தாங்குவதற்குச் சக்தியில்லாமல், ஒரு உண்மை வீரனைப் போன்று மார்பில் ஏராளமான விழுப் புண்களை ஏற்றுக் கொண்டு மடேர் என்று பல பிளவுகளாகப் பிளந்து உள் நோக்கிச் சாய்ந்தது.

(தொடரும்)

With best compliments from

★

J. M. BAXI & CO.

2/21, NORTH BEACH ROAD
MADRAS - 600 001.

Phone : 20016 4 (lines)
Telex : 626 & 416

Post Box
Cables : "BXICO"

# கண்ணன் கதைகள்

## தீபம் நா. பார்த்தசாரதி

### 7. பூதனையின் வேதனை

ஊரெங்கும் அதைப் பற்றிப் பிரமாதமாகப் பேசிக்கொண்டார்கள். அந்தக் குழந்தை பிறந்ததிலிருந்து கோகுலத்தில் மழை குன்றுவதில்லையென்றும், வளங்களெல்லாம் பெருகி வளர்கின்றன என்றும் பலர் பேசிய பேச்சுக்களைக் கம்சன் செவியுற்றான். நந்தகோபருடைய குழந்தையினிடத்தில் ஏதோ ஒரு தெய்வீக ஆற்றல் இருக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. ஒருவேளை தன்னை அழித்தொழிக்கப் பிறந்திருக்கும் உயிர் அதுதானோ என்று ஓர் ஐயமும் அவனுக்கு ஏற்பட்டது. 'ஐயம் எதற்கு? அந்த ஒரு குழந்தையால்தானே நமக்கு இவ்வளவு பயம் ஏற்படுகிறது? அதைக் கொன்றுவிட ஏற்பாடு செய்தால் என்ன?'' என்று தனக்கே உரிய இயற்கை முரட்டுக் குணத்தோடு சிந்தித்தான் அவன். குழந்தையைக் கொல்ல ஏற்பாடு செய்தவன் தான் என்று நந்தகோபருக்குச் சந்தேகம் ஏற்படாதபடி இரகசியமாகச் சதி செய்தான் கம்சன்.

அக்காலத்தில் பூதனை என்று ஓர் அரக்கி இருந்தாள். உடலெல்லாமுள்ள உறுப்புக்கள் யாவும் நஞ்சாலாகியிருந்தன அவளுக்கு. தன் மார்புகளால் நச்சுப்பால் ஊட்டி எத்தனையோ, குழந்தைகளைக் கொலை செய்து பழக்கமுடையவள் அவள். கம்சன் அவளை வரவழைத்துச்-

செய்திகளை அவளுக்கு விளக்கிக்கூறி அவளைக் கோகுலத்தில் நந்தகோபருடைய மாளிகைக்கு அனுப்பினான்.

பயங்கரமான தோற்றத்தையுடைய பூதனை கோகுலத்தில் நுழையும்போது தன் தோற்றத்தை மாற்றிக் கொண்டாள். திருவினும், உருவினும், சிறந்த ஓர் அழகிய இளம் பெண்ணாகத் தோற்றங் கொண்டு நந்தகோபருடைய வீட்டிற்குள் அவள் நுழைந்தாள். அவளுடைய எழில் மிக்க இளமை உருவத்தையும், கவர்ச்சியையும் கண்டு வாயிற் காவலர்கள் கூட அவளைத் தடுக்கவில்லை. யாதொரு தடையுமின்றி மாளிகைக்குள் நுழைந்த பூதனை சுற்றும் முற்றும் பார்த்தாள். நந்தகோபரின் சிறுவன் மாளிகை முன் புறத்தில் தனிமையாக விளையாடிக் கொண்டிருந்தான். அலகிலா விளையாட்டுடையவன் நிலத்தில் விளையாடியவாறே தவழ்ந்தான், எழுந்தான், குதித்தான், ஆடினான், பாடினான். அவன் அங்கே பூதனையின் வரவை எதிர்பார்த்திருந்தவன் போலவே தனிமையை மேற்கொண்டிருந்தான் போலிருந்தது.

பூதனை ஆவலோடு குழந்தையின் பக்கத்தில் சென்று வாரியணைத்தெடுத்தாள், கொஞ்சினாள். பின் கீழே உட்கார்ந்து கொண்டு மார்பைத் திறந்து குழந்தையை மடியில் இருத்திப் பால் அருந்தச் செய்தாள். பாலை அருந்துவதற்கு முன் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்துச் சிரித்தான் அந்தச் சிறுவன். அந்தச் சிரிப்புக்கு என்ன பொருளோ? பூதனையின் பருத்த தனத்தின் காம்பில் சிறுவனின் பட்டு இதழ்கள் கவ்வின. நீருற்றுப் பொங்கி எழுவதுபோல் நச்சுப்பால் பீறிட்டுப் பெருகியது விரும்பிச் சுவைப்பது போல் சிறிது நேரம் பருகிக் கொண்டிருந்தான் சிறுவன். திடீரென்று அவனுடைய சிறிய வாயிதழ்களும், முற்றாத இளம் பற்களும் அவளுடைய மார்பில் அழுந்தின. இலேசாகக் கடித்தன.

அடுத்த கணம் பூதனை வீறிட்டாள். வலி பொறுக்க முடியாமல் அலறினாள். ''ஐயோ, விடு, விடு!'' என்னை விட்டு விடு நான் ஓடிப்போய் விடுகிறேன்''—அவள் சிறுவனை மார்பிலிருந்து உதறிவிட்டு ஓட எழுந்தாள். ஆனால் அவன் விடவில்லை. பாலைக் குடிப்பதற்குப் பதிலாக அவள் உயிரையே மார்பின் வழியாகக் குடித்துவிட்டான் அவன். வேரறுபட்டு வீழும் மரம்போல் கீழே சாய்ந்தாள் பூதனை. கீழே விழுந்ததும் அவள் தனது பழைய இராட்சத உருவத்தை அடைந்தாள். பார்க்கச் சகிக்காத அவள் தோற்றம் மலை விழுந்து கிடப்பதுபோல் உயிரற்று வீழ்ந்து கிடந்தது. சிறுவன் எழுந்து நின்றுகொண்டு பால் புலராத வாயோடு அவளை நோக்கிக் கைகொட்டிச் சிரித்தான்.

இதற்குள் சப்தத்தைக் கேட்டு நந்தகோபரும், வீட்டிலுள்ள யசோதை முதலிய பெண்களும் ஓடி வந்தனர். இறந்து கிடக்கும் பூதனையைப் பார்த்து அஞ்சினர். குழந்தை பயந்து கொண்டிருப்பானோ என்றெண்ணிப் பயம் தீர மந்திரங்களால் சாந்தி செய்தார் நந்தகோபர். யசோதை குழந்தையை நீராட்டித் தொட்டிலில் இட்டு உறங்கச் செய்தாள். பூதனையின் பிணத்தை ஏவலர்களைக் கொண்டு மயானத்திற்கு அனுப்பி எரித்துச் சடங்கு செய்தனர். வேதனையைக் கொடுப்பதற்கு வந்த பூதனை தானே வேதனையை அடைந்து எரிந்து நீறாக மண்ணோடு மண்ணாகக் கலந்தாள்.

(தொடரும்)

ஸ்ரீ:

# ஸ்ரீவைஷ்ணவம்

Dr.V.V. ராமானுஜம்

தொல்காப்பியம் தமிழ்நூல்களுள் மிகத்தொன்மை வாய்ந்தது. இதற்குப் பின்னரே மற்றைய தமிழ்நூல்கள் தோன்றின. பரிபாடல், பத்துப் பாட்டு, கலித்தொகை முதலானவை சங்ககாலத்து நூல்கள். சங்ககாலத்துக்குப் பின்னர், அதையொட்டிய காலத்தில் உலகப்பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறளும், கண்ணகியின் கதையைச் சொல்லும் சிலப்பதிகாரமும் தோன்றின. ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் இவைகளுக்குப் பிற்பட்டவை என்று பழந்தமிழ் நூல்கள் தோன்றிய கிரமத்தைத் தற்காலத்திய ஆராய்ச்சியாளர்கள் வரையறுக்கிறார்கள். இந்நூல்களில் **மாயோன்** என்று கண்ணபிரான் போற்றப்படுகிறான். கண்ணன் தன்னுடைச் சோதிக்கு (பரமபதத்திற்கு) எழுந்தருளிய சிறிது காலத்தே நம்மாழ்வார் திருவவதாரம் என்பது சம்பிரதாயம் ஆகையால் திருவாய்மொழி இந்நூல்களுக்கெல்லாம் முற்பட்டது என்பது சம்பிரதாயக் கொள்கை. இக்கருத்து வேற்றுமை நிற்க. தொல்காப்பியம் அருளிச்செயல்கள் போல் சமயநூலல்ல. அது ஒரு இலக்கண நூல். சங்ககால நூல்களையும் இலக்கியங்களாகப் போற்றுகின்றனரேயன்றிச் சமயநூல்களாகக் கொள்ளக் காணேம். ஆயினும், இவற்றிலெல்லாம் விஷ்ணுபகவானே பரம்பொருளாகப் பேசப்பட்டிருப்பதைக் காணலாம். மற்றைய தெய்வங்களைப் பற்றிப் பேசினாலும், வேதவழியை விட்டு விலகாமல், எந்த தெய்வத்துக்கும் தாழ்ந்தவனாக நினைக்கவும் கூடாத வகையில் திருமாலைப் பரதெய்வமாகவே

இந்நூல்கள் பேசுகின்றன. தேவதாந்தரங்களை உயர்த்தி பகவானைக் குறைத்துப் பேசும் (தற்போது சமய உலகில் நிலவி வரும் பாமரக்கதைகள்) விஷயங்கள் இவற்றில் தலை காட்டாமையால், அவை பிற்காலத்தில் புனையப்பட்டவை என்பது தெளிவாகும்.

நாட்டையாளும் அரசனிடம் விஷ்ணுவின் அம்சம் வந்து புகும் என்பர் பெரியோர். திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக்கண்டேனே என்னும் -என்று திருவாய் மொழி காண்க. அரசனைத் திருமாலுடன் உவமித்துக் கூறுமிடத்து,

**மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்**
**றாவா விழுப்புகழ் பூவை நிலையும்**

என்கிறார் தொல்காப்பிய ஆசிரியர். திருமாலின் ஒப்பற்ற பெருமைகளை **மன் பெருஞ்சிறப்பின், தாவா, விழு** என்று தம் ஆதராதிசயமெல்லாம் தோன்றும் படி விசேஷமாகக் கூறுவதும் வேறெந்த தெய்வத்தையும் கூறாமையும் குறிப்பிடத் தக்கன.

திருமாலே எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள்- பிரமனுட்பட எல்லா தேவதைகளையும் படைத்த ஆதிபகவான். வேதாந்தங்களான உபநிஷத்துக்களில் பேசப்பட்ட இறைவன் இவனே. இவனே பஞ்சபூதங்களுக்கும் காரணபூதன். எங்கும் நிறைந்தவன். இவனே முக்தியளிக்கவல்ல இறைவன். இவன் பதம் பணிந்தே மறுபிறப்பறுப்பதாகிய மோக்ஷப்பேற்றைப் பெற வேண்டும் என்ற வேதக்கருத்துக்களை சங்ககாலத்து நூலான பரிபாடலும் பகர்கின்றது. இந்நூலிலிருந்து சில இடங்களைக் கீழே காண்க.

**மாஅயோயே மாஅயோயே**
**மறுபிறப்பறுக்கும் மாசில்சேவடி** என்றும்

தீவளி விசும்பு நிலனீரைந்தும்
ஞாயிறு திங்களு மறனுமைவருந்
திதியின் சிறுரும் விதியின்மக்களும்***
மாயோய் நின்வயிற் பரந்தவை என்றும்,

தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றம்நீ
கல்லினுள் மணியுநீ சொல்லினுள் வாய்மைநீ
அறத்தினுள் அன்புநீ மறத்தினுள் மைந்துநீ
வேதத்து மறைநீ பூதத்து முதலுநீ
வெஞ்சுடரொளியுநீ திங்களுள்ளிநீ***
பிறவாய் பிறப்பிலை பிறப்பித்தோரிலையே என்றும்

நாறிணர்த்துழாயோன் நல்கினல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்

-என்றும் சங்கச்சான்றோர் திருமாலின் பெருமைகளைப் பரக்கப் பேசுகின்றனர்.

யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்
யோவை வேதாம்ஸ்ச ப்ரஹிணோதி தஸ்மை

என்று மோக்ஷப்ரதனை எம்பெருமானே பிரமனைப்படைத்து வேதங்களை அவனுக்குக் காட்டித் தந்தான் என்று உபநிஷத்துக்கள் உத்கோஷிக்கும் உண்மையை இந்நூல்களும் பகர்கின்றன.

நாமவெள்ளத்து நடுவண்தோன்றிய
வாய்மொழி மகனொடு மலர்ந்த
தாமரைப் பொருட்டு —பரிபாடல்

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்பூ
—மதுரைப் பரிபாடல்

நீலநிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற்பயந்த பல்இதழ்த்
தாமரைப் பொருட்டு —பெரும்பாணாற்றுப்படை

-என்பன காண்க.

**ஆங்குமலரும் குவியுமாலுந்திவாய்**
**ஒங்கு கமலத்திஞெண்போது –**

என்று பேயாழ்வாரும்

**தாமரையுந்தித் தனிப்பெருநாயக!**
**மூவுலகளந்த சேவடியோயே!**

என்று நம்மாழ்வாரும் போற்றியுள்ளது அருளிச்செயல்களில் ஓரிரு இடங்கள்.

நரசிங்கப் பெருமானின் பேரருளைப் பெற்ற பிரகலாதாழ்வானின் பேரனுன மஹாபலி தேவர்களைப் போரில் வென்று அவர்களுடைய அரசுகளைத் தன் குடைக்குக்கீழ் கொணர்ந்து ஆளுகையில், அரசிழந்த தேவர்களின் வேண்டற்பாட்டினை யொட்டி, பகவான் குறியமாணுருவான வாமன வேஷங்கொண்டு, தன்னடியால் மூன்று அடி மண் யாசித்துப் பெற்று, பின்னர் நெடியோனாய் வளர்ந்து *தாவியைங்கொண்ட தடந்தாமரைகளால் அளந்தமையை

**த்ரீணிபதா விசக்ரமே விஷ்ணுர் கோபா அதாப்ய:**
**ததோ தர்மாணி தாரயன்** என்றும்

**உபேதேவித்மஈஜஸீ ப்ருதிவ்யா விஷ்ணோ தேவத்வம்**
**பரமஸ்ய வித்ஸே**

என்றும் உபநிஷத்துக்கள் கொண்டாடுகின்றன. ''ஸர்வரக்ஷகனும் யாராலும் ஜயிக்கமுடியாதவனுமான விஷ்ணு பகவான் மூவுலகங்களையும் அளந்து (தன்னதாக்கிக் கொண்டு) அதனுல் தர்மஸ்தாபனம் செய்தான்'' என்றும், ''விஷ்ணுபகவானே! பூமியிலிருந்து தேவரீர் இரண்டு அடிகள் வைத்ததை அறிவோம்; மூன்ருவது அடியை (எங்கு வைத்தது என்று) தேவரீரே அறியும்'' என்றும் இம்மந்திரங்களின் கருத்து.

திருமால் திருவுலகளந்தருளிய சரித்திரத்தைப் பழந் தமிழ் நூல்கள் கொண்டாடிப் பேசுவதைக்காட்ட சில பாடல்கள்:

கீழ் ஏழ் உலகமும் உற்ற அடியினை —பரிபாடல்
ஞாலம் மூன்றடித்தாய முதல்வதற்கு —கலித்தொகை
இருநிலங்கடந்த திருமருமார்பின —பெரும்பாணாற்றுப்படை

வாணன் பேரூர் மருகிடை நடந்து
நீணிலமளந்தோன் ஆடியகுடமும் —சிலப்பதிகாரம்

நெடியோன் குறளுருவாகி நிமிர்ந்துதன்
அடியிற் படியை அடக்கிய அந்நாள் —மணிமேகலை

பல நூற்றுக்கணக்கான இடங்களில் ஆழ்வார்கள் எம்பெருமானின் இதே திவ்விய சேஷ்டிதத்தைப் போற்றி உருகுவதையும் காண்போம் :

ஆழியெழச் சங்கும் வில்லுமெழ திசை
வாழியெழத் தண்டும் வாளுமெழ அண்டம்
மோழையெழ முடிபாதமெழ அப்பன்
ஊழியெழ உலகம் கொண்டவாறே —திருவாய்மொழி

உலகமளந்த பொன்னடியே அடைந்துய்ந்தேன்
—பெரியதிருமொழி

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி***
அன்றிவ்வுலகமளந்தாய்! அடிபோற்றி —திருப்பாவை

(தொடரும்)

# தாடாளன் ஸன்னிதி

சிதம்பரத்திலிந்து புறப்பட்ட நாங்கள் சீர்காழி என்று வழங்கப்படும் காழிச்சீராம விண்ணகரம் எனும் திவ்ய தேசத்திற்குச் சென்றோம். இத்தலம் பொதுவாக தாடாளன் ஸன்னிதி என்றே அழைக்கப்படுகிறது. சீர்காழியில் நடுநாயகமாய் கோயில் அமைந்துள்ளது. பஸ்மார்க்கம் உண்டு. சீர்காழி என்ற பெயரிலேயே ரயில் ஸ்டேஷனும் இருக்கிறது.

சிதம்பரத்திலிருந்து பஸ் மூலமாகவே நாங்கள் சீர்காழியை அடைந்தோம். இது சிறிய நகரமாக இருப்பதால் சகல வசதிகளும் உள்ளன.

## T.A.பாஷ்யம்

மிக நேர்த்தியான கோயில். கோயிலைச் சுற்றி அழகிய, சிறிய மாடவீதிகள் நான்கும், ஸன்னிதி வீதியும் உள்ளன. கோயிலின் பின்புறம சக்ர தீர்த்தமுள்ள சங்க புஷ்கரிணி, மிக அழகாக அமைந்திருக்கிறது. பார்த்த உடனே அதில் நீராட வேண்டுமென்ற அவா. நீராடி அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு கோயிலுக்குள் புகுகிறோம்.

மிகச்சிறிய கோயிலானாலும், நேர்த்தியாகவும் அழகாகவும் இருக்கிறது. உள்ளே நுழைந்து துவஜஸ்தம்பமருகில் ஸேவித்து எழுந்தால், எதிரே சக்ரவர்த்தி திருமகன் ஸன்னிதி காட்சியளிக்கிறது.

முதலில் கோயிலைப்ரதக்ஷிணம் செய்யலாம் என்று, கோயிலினுள் புகுந்தால் தாயார்ஸன்னிதி எதிர்ப்படுகிறது. நமது ஸம்ப்ரதாயமும் தாயாரைச் சேவித்துவிட்டு, அவள் புருஷகாரத்தோடு பெருமானை ஸேவிப்பதுதானே. அர்ச்சகர் மிகஅழகாக ஸேவைசெய்து வைக்கிறார்: ''தாயார் திருநாமம் லோக நாயகி, ஆழ்வார் 'மட்டவிழும் குழலி' என்று மங்களாசாஸனம் செய்துள்ளார்.''

---

மேலட்டையில்: தாடாளன் எம்பெருமான்.

அப்படியே பிரதக்ஷிணமாக வந்து ஆண்டாள் ஆழ்வாராசாரியர்கள், ராமர் ஸன்னிதிகளை ஸேவித்துவிட்டு பிரதான ஸன்னிதிக்குள் நுழைகிறோம். எதிரே ஓங்கி உலகளந்த உத்தமன் காட்சியளிக்கிறான். மிகவும் கம்பீரமான திருமேனி. அதனினும் கம்பீரமாக இருப்பது அர்ச்சகருடைய திருவாக்கு: ''இந்த எம்பெருமான் திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்டவர். பெரிய திருமொழி(3-4)யில் ஒரு பதிகத்தால் மங்களாசாஸனம் செய்துள்ளார். **ஒருகுறளாய் இருநிலம் மூவடி மண்வேண்டி உலகனைத்தும் ஈரடியாலொடுக்கி ஒன்றும தருகவென்று மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன்** என்று விசேஷமாக மங்களாசாஸனம் செய்திருக்கிறார். அஷ்டாவக்ர மஹா முனிக்கு த்ரிவிக்ரமனாக ஸேவைஸாதித்ததாகப் புராணம். **'நான்முகன் நாள் மிகைத்தருக்கை நலமிகுசீர் உரோமசனால் கவி**ற்றி'' என்று திருமங்கை ஆழ்வார் தமதுபாசுரத்தில் அருளியபடி ரோமச மகரிஷிக்கும் ப்ரத்யக்ஷம். புஷ்கலாவர்த்த விமானம்; கிழக்கே திருமுகமண்டலம். திருமுன்பே உத்ஸவர், ஸ்ரீதேவி பூதேவிகளோடு மந்தஹாஸத்துடன் எழுந்தருளியிருக்கிறான்'' என்றெல்லாம் அர்ச்சகர் சேஷாத்ரி பட்டாசாரியார் கணீரென்ற குரலில் தெரிவித்தபோது மெய்சிலிர்க்கிறது.

அவர் மேலும் தெரிவித்த விவரங்கள்: ''இந்த ஸன்னிதி வைகானஸ ஆகமப்படி திருவாராதனம் செய்யப் பெறுகின்றது. சோளசிம்மபுரம் தொட்டாசாரியர் ஸ்வாமி ஆதீனத்தில் உள்ளது. வைகாசி மாதம் ப்ரஹ்மோத்ஸவம் சிறப்பாக நடைபெறுகிறது. நாயன்மார்களில் ஒருவரான திருஞானஸம்பந்தர் பிறந்த இடமும் இதுவே. இங்கு திருமங்கையாழ்வார், ஞானசம்பந்தரோடு வாதம் செய்து வென்று அவ்வெற்றிக்குப் பரிசாக அவரது வேலையும் பெற்றுக் கொண்டார்'' என்று கூறி முடித்தார்.

எம்பெருமானை ஸேவித்த மகிழ்ச்சி ஒருபுறமும், ஆழ்வார் பாசுரங்களையும், வரலாறுகளையும் திறம்பட உரைத்த அர்ச்சகருடைய சொற்களால் உளம் குளிர்ந்த மகிழ்ச்சி ஒருபுறமும் நிறைந்திருக்க நாங்கள் திருமங்கையாழ்வார் அவதரித்த இடமான திருநகரியைச் சுற்றியுள்ள திருநாங்கூர் திவ்யதேசங்களை ஸேவிக்கப் புறப்பட்டோம்.

# மகான்களின் மணிவிழா

அளவற்ற செல்வங்களையும் வற்றாத நீரையும் கொண்டது கடல், அக்கடலிலிருந்து நீரைப்பருகி உலகுக்கு வாரி வழங்குவது மேகங்கள்.

அப்படி ஞானக்கடலாக எழுந்தருளியிருந்தவர் ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் காரப்பங்காடு வேங்கடாசாரியர் ஸ்வாமி. அவரிடம் பருகிய விசேஷார்த்தங்களை மேகம் போல்பொழிந்து உலகை உய்வித்துக் கொண்டிருப்பவர்களில் இருவர் ஸ்ரீ உ. வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்மாசாரியர் ஸ்வாமியும், ஸ்ரீ உ. வே. வாகம்ருதவர்ஷீ வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமியும்.

---

## M A. வேங்கடகிருஷ்ணன்

---

சதாபிஷேகம் ஸ்வாமிக்கு அப்பெயர் குடிப்பெயராகவே ஏற்பட்டது. அவரது மூதாதையர்களில் ஒருஸ்வாமி பல நூற்றுக்கணக்கான முறைகள் ஸ்ரீராமாயண காலக்ஷேபம் செய்து பட்டாபிஷேகங்கள் நடத்தியிருப்பதால் அவருக்கு சதாபிஷேகம் என்ற பெயர் ஏற்பட்டு அவரது குடும்பத்தினருக்கும் வழங்கிவருகிறது. ஆயினும் நம் கோவிந்த நரஸிம்மாசாரியரைப் பொறுத்தவரை, தமது அழகான சொல்லாற்றலால் பல நூற்றுக்கணக்கான முறைகள் ஆஸ்திகர்களை ஆநந்த மழையில் நனைத்து அபிஷேகம் செய்திருப்பவராதலால்—சதாபிஷேகம் என்ற இச்சிறப்புப் பெயர்—இவருக்காகவே ஏற்பட்டது என்று எண்ணத் தோன்றுகிறது.

வாகம்ருதவர்ஷீஸ்வாமிக்கோ இச்சிறப்புப் பட்டம் இவருக்கென்றே அளிக்கப்பட்ட ஒன்று. சொல் அமுதமாகிற மழையைப் பொழிபவர் என்பது இதன் பொருள். உபன்யாஸத்தை ஆரம்பித்து விட்டால், தங்கு தடையில்லாமல் சொல்லமுதம் பொழியும் ஆற்றலைக் கண்டு வியக்காதார்

இல்லை. அதனாற்றான் நம் ஸ்வாவாமிக்கு எத்தனையோ பட்டங்கள் அளிக்கப்பட்டிருந்தாலும் இப்பட்டம் மட்டும் ஏகதேசமாக இருக்கிறது.



பூருவாசாரியர்கள் காலத்தில் நம்பெருமாள் கோஷ்டி மிகப் பெரியதாக இருந்ததில் ஆச்சரியமில்லை. அக்காலத்தில் நம்பிள்ளை எனும் ஆசாரியருடைய கோஷ்டி மிகப் பெரியதாக இருக்குமாம். 'நம்பெருமாள் கோஷ்டியோ நம்பிள்ளை கோஷ்டியோ' என்று வியக்குமளவுக்கு இருக்குமாம். அதை நேரில் காணும் பாக்கியமில்லாத நமக்கு மணிவிழாக் காணும் ஸ்வாமிகளின் கோஷ்டி நல்விருந்தாக அமைந்தது. சுமார் 200 சுவாமிகள் ஒருசேரக்காட்சியளித்தது, அபூர்வமானதொன்று. இவ்வளவு ஸ்வாமிகளை ஒருசேரக் கண்டதுமே ''பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம், நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை, கலியும் கெடும் கண்டு கொண்மின்'' என்று எக்காளமிடத் தோன்றியது.

ஷஷ்டியப்தபூர்த்தியை முன்னிட்டுப் பல மாதங்கள் முன்பே கமிட்டிகள் நிறுவப்பட்டு, ஸ்ரீவைஷ்ணவர்களனை வரும் கலந்து கொள்ளும்படி அழைப்புக்கள் விடுக்கப்பட்டிருந்தன. ஸ்ரீவைஷ்ணவ உலகமே பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கத்தில் கூடப்போகும் அந்த நாட்களை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர் அனைவரும் அந்நாளும் வந்தது.

ஸ்வாமிகள் இருவருக்கும் ஸ்ரீரங்கத்தில் கிழக்கு உத்தர வீதியில் திருமாளிகைகள். அவ்வீதியையே அடைத்துக் கொண்டு மிகப் பெரும் பந்தல்கள். அந்த மாபெரும் பந்தலும் போராது எனும்படிக்கு அடைத்துக்கொண்டிருந்த ஸ்ரீவைஷ்ணவர் திரள். விண்ணையும் மண்ணையும் அதிர



வைக்கும் வகையில் அவர்கள் எழுப்பிய ஸேவாகால பாராயண கோஷங்கள். அப்பப்பா! இவற்றையெல்லாம் படித்துத் தெரிந்துகொள்ள முடியாது. நேரில் கண்டும் கேட்டுமே அனுபவிக்கத்தக்கவை.

21-1-81 அன்றே ஸ்ரீரங்கம் திருவிழாக் கோலம் பூண்டது. அன்று மாலை ஸ்ரீ உ. வே. வாகம்ருதவர்ஷி ஸ்வாமி திருமாளிகையில் ஸேவாகாலம் தொடக்கம். 26-1-81 மாலை வரை இரண்டு நாட்களும் கோஷ்டிகள். பிற்பகல் வேளைகளில் வித்வத்ஸதஸ்கள். இரவு வேளைகளில் ஸம்ப்ரதாயக் கலா நிகழ்ச்சிகள். இப்படி மணிவிழா நிகழ்ச்சிகள் ஸ்ரீரங்கத்தையே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்த வண்ணமிருந்தன.

28-1-81—தை பீ ஸ்வாதியன்று சதாபிஷேகம் ஸ்வாமிக்கு ஷஷ்டியப்த பூர்த்தி விழா. எனவே வாகம்ருதவர்ஷி ஸ்வாமியின் கோஷ்டி வைபவங்கள் சதாபிஷேகம் ஸ்வாமியின் திருமாளிகைக்கு மாறின 27-1-81 அன்று.



அன்றைய தினமும் மறுநாளும் அங்கு ஸேவாகாலங்களும் பாராயணங்களும் நடைபெற்றன. சாற்றுமுறைக்கு முன்

திவ்யதேசங்களிலிருந்து வந்த மரியாதைகள் வாகம்ருதவர்ஷீ ஸ்வாமியை அனுக்ரஹித்த வண்ணமிருந்தன. பிறகு சாற்றுமுறை ஸம்பாவனை முதலியன நடைபெற்றன.

அன்று பிற்பகல் மீண்டும் கோஷ்டி வாகம் ருதவர்ஷீ ஸ்வாமி திருமாளிகைக்கு மாறியது. கோஷ்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இந்து அறநிலையத்துறை



ஆணையர் திரு U. சுப்ரமணியம் IAS அவர்கள் விஜயம் செய்து, சுமார் ஒருமணி காலம் கோஷ்டியில் அமர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்ற இதழ் கீதாசார்யனில் இணைக்கப்பட்டிருந்த ''வாகம்ருதவர்ஷீ வைபவம்'' தனிநூலாக கோஷ்டி முடிந்ததும் வெளியிடப்பட்டது. கீதாசார்யன் ஆசிரியர் வரவேற்புரைவழங்க, ஆணையர் தமது சிற்றுரைக்குப்

பிறகு முதல் பிரதியினை ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஸ்வாமியிடம் அளித்தார். பிறகு மணிவிழாக்கமிட்டியின் அமைப்பாளர் பேராசிரியர் Dr ஆ. திருவேங்கடத்தான் நன்றியுரை கூறினார். இந்நூலை எழுதிய Dr V. V



ராமானுஜம் அவர்களுக்கு ஆண்டையர் மாலை அணிவித்து கௌரவித்தார். மிகக் குறைந்த நிமிடங்களே நடைபெற்ற இந்த வெளியீட்டுவிழா அனைவருடைய கருத்தையும் கவர்ந்துவிட்டது.

மறுநாள் காலை (தை விசாகத்தன்று) வாகம்ருதவர்ஷி ஸ்வாமிக்கு ஷஷ்டியப்த பூர்த்திவிழா. காலை ஸேவை முடிந்ததும் திவ்ய தேசங்களிலிருந்து வந்திருந்த மரியாதைகள் ஸ்வாமியை அனுக்ரஹித்த வண்ணமிருந்தன.

நம்மாழ்வார் திருப்புளியாழ்வாரடியிலே எழுந்தருளியிருக்க, திவ்யதேசத்தெம் பெருமான்கள் நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு நம்மாழ்வாருக்குக் காட்சி

யளித்து அனுக்ரஹித்தார்கள் என்கிறது குருபரம்பரை வரலாறுகள். இதை நேரில் காணும் வாய்ப்பு இவ்விரு ஸ்வாமிகளின் மணிவிழாவில் கிடைத்தது.

ஆழ்வார் பெற்றபெறு அவருடைய திருவாய்மொழியை காலக்ஷேபம் செய்யும் மகான்களுக்குக் கிடைக்காமல் போய் விடுமா? சுமார் 60 திவ்யதேசங்களிலிருந்து எழுந்தருளியிருந்த மாலைகளும், போர்வைகளும் அனுக்ரஹித்து முடிய சுமார் இரண்டு மணி காலமாயிற்று.



பிறகு திருக்கல்யாண மகோத்ஸவம், கோஷ்டியார் மட்டுமின்றி ஸ்வாமிகளின் பக்தர்களும் சிஷ்யர்களும் ஆயிரக்கணக்கில் பெரும் திரளாகப் பந்தலில் வீற்றிருக்க திருக்கல்யாணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கண் கொள்ளாக் காட்சி.

தத்தமது வாக்அம்ருத வர்ஷத்தால் ஆஸ்திகர்களது உள்ளத்தை அபிஷேகம் செய்து உய்வித்து வரும் இவ்விருதுமகான்களுடைய மணி விழாவும் ஒருசேர அமைந்தது ஸ்ரீவைஷ்ணவவுலகின் பாக்கியமே. சென்ற 22-1-81 முதல் 29-1-81 இம்மணிவிழா திருவரங்கம் பெரிய கோயிலில் வரலாறு காணாத வகையில் சிறப்பாக நடைபெற்றது.



இவ்விரு மகான்களும் பல்லாண்டு எழுந்தருளியிருந்து தமது சதாபிஷேகத்தையும் இதை விடச் சிறப்பாக நடத்திக் கொள்ள எம்பெருமானை அருள்புரியும்படி பிரார்த்திக்கிறோம். அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு.




## 17. கருட ஸேவை

அகிலபுவனங்களையும் அண்டசராசரங்களையும் ஆட்டிப் படைக்கும் ஸ்ரீமந்நாராயணன், அழகிய மணவாளனாக சௌசீல்ய சௌலப்யாதி குணங்களுடன், ராமாவதார காலம் முதல் திருவரங்கத்தில் எழுந்தருளி, ஆச்ரிதரக்ஷணார்த்தம் எளியவுருக் கொண்டு உலோகத்தில் அடைந்தும் அடையாதவனாய், முகோல்லாஸ பூபதியாய் அன்று பெரிய திருவடியின் மீது, திருமேனி மூடப்பட்டாலும் திருமுகமண்டலம் கோடி ஸூர்யப்ரகாசமாய் ஜ்வலிக்க, ஆழ்வார்களும் அடியார்களும் நடந்து நடந்து பவித்ரமான சித்திரை வீதியில் பவனி வந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது ஸூர்யோதயமாகி பத்து நாழிகைக்கு மேலாகி விட்டதால் பகலவன் தனது உஷ்ணத்தை அதிகமாக வீசி சித்திரை வீதியின் மடப்படிகளை அக்கினிப் படிகளாக அடித்துக் கொண்டிருந்தான்.

அதை எதிர்பார்த்தே வீதிகளில் முன்னரே திருவரங்க மதிமுக இல்லத்தரசிகள் ஆங்காங்கு நீர்தெளித்து, விதவிதமாகக் கோலமிட்டு வைத்திருந்ததால் அந்த வீதிகளின் சூர்ய உஷ்ணமும் ஓரளவு சமனப்பட்டிருந்தது. கோலங்களின் கலைச்சிறப்பும் கண்களைப் பறித்தது. இத்தகைய வீதியில் பவனிவந்த பரமாத்மாவின் ஸ்ரீபாதந்தாங்கிகளுக்கும் சரி, முன்னே சென்றுகொண்டிருந்த திவ்யப்ரபந்த கோஷ்டிக்கும்

சரி, எம்பெருமானுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த வேதகோஷ்டிக்கும்சரி துன்பமேதுமில்லாத நிலையிருந்தது.

எம்பெருமான் ப்ரபந்தத்தை ஏன் பின்தொடர்ந்தான்? இலக்கியத்தை இலக்கணம் ஏன் பின்தொடர்ந்தது? த்வது பகத ஸமாஸ ஸந்தியோகம் என்றக்ரமப்படி ஸ்ரீராமாயண சுலோகங்கள் வால்மீகிபகவான் முகத்தால் உதிர்ந்த பின்னர் ஸமாஸ ஸந்தி இலக்கணங்கள் அந்த இலக்கிய அமைப்புப்படி பின்தொடர்ந்தன. அம்மாதிரியே ஸர்வ லக்ஷண ஸம்பந்நனாய் எழுந்தருளிருளியிருக்கிற எம்பெருமானும் லக்ஷ்யக்ரந்தமான ப்ரபந்தப் பாசுரங்களைப் பின் தொடர்ந்தான்.

அப்பேர்ப்பட்ட 'சந்த்ர காந்தாநநம் ராமம்' என்ற வால்மீகியின் வசனப்படி ஜாஜ்வல்யத்துடன் குளிர்ந்து மிக அழகாகக் காணப்பட்ட எம்பெருமான் முகத்தை, சற்றே கழுத்தை வளைத்து கருடாழ்வான் நோக்கிய வண்ணமே வந்து கொண்டிருந்தான். தன்னுடைய வேகத்தையும் கர்வத்தையும் த்வாபரயுகத்திலேயே அடக்கியவனும், அதற்கு முன்பாகத் தன்னை அலக்ஷ்யம் செய்து ஆதிமூலமே என்றலறின கஜேந்திரனைக் காக்க விரைந்தவனும், அதனாலேயே அவன் சக்தியிலிருந்தே தனக்கு சக்தி பிறக்கிறது என்று உணர்ந்தவனுமான கருடன் அந்த சக்தியை நிரந்தரமாகப் பெறும் நோக்கத்துடன் அழகிய மணவாளனுடைய திருமுக மண்டலத்தையே நோக்கிக் கொண்டிருந்தான்.

ஆதிமூலமே என ஆனை அலறினவுடனேயே தான்தான் ஆதிவஸ்து என்பதை நிரூபிக்கப் பள்ளியரவணையைத் தள்ளி யெழுந்த பகவான் ''பங்கயத் திருவைப் பாரான், பணிமுடி நிழலைத்தேடான், சங்குசக்கரமுமேந்தான். தன்னெதிர்த் தொழுது நிற்கும் இங்கிதக் கருடன் மீதில் ஏறினன் ......''

என்ற சமீபகால வெண்பாவின்படி விரைந்தான் விலங்கைக் காக்க. அந்த நிகழ்ச்சியை நினைத்த கருடன் கண்கள் அன்றிலிருந்து பகவந்நியமனத்திற்காக அவன் கண்களையே நோக்கிக் கொண்டிருந்தன.

அன்றும் அந்த ஸேவையை ஏராளமான உள்ளூர் பக்த கோடிகளும் வெளியூர் யாத்ரிகர்களும் வந்து ஸேவித்துக் கொண்டிருந்தார்கள். கருடாருடனை அரங்கன் தெற்குச் சித்திரை வீதியில் எழுந்தருளிக் கொண்டிருந்த போது மற்ற வீதிகளை விட அவ்வீதியில் ஜன நெருக்கம் தாங்க முடிய வில்லை. ''உழுந்திட இடமில்லை உலகமெங்கணும்'' என்று சீதா கல்யாண காலத்தில் மிதிலையின் ஜன நெருக்கடியை அந்த வீதியும் கொண்டிருந்ததால் ஒருவருக்கொருவர் இடித்துக் கொண்டும் தள்ளிக் கொண்டும் கருடவாகன ஸேவையில் ஈடுபட்டிருந்தார்கள். பகலவன் உயரக் கிளம்பித் தகித்த உஷ்ணத்தைக் கூட மக்கள் லக்ஷ்யம் செய்யவில்லை.

இந்த நிலையில் உடையவர் தெற்கு கோபுரவாயிலின் ஒருபுறமாக நின்று பெருமாளை ஸேவித்துக் கொண்டிருந் தார். அவருடைய மனமெல்லாம் பார்வையெல்லாம் மயர்வற மதிநலமருளிய அழகிய மணவாளன் மீதே நிலைத் திருந்ததால் சுற்றுப்புறங்களை மறந்தார். யோகசித்தியில் ஆழ்ந்தார். அத்தகைய அவருடைய மனத்தையும் கலைக்கும் படியான விசித்திர நிகழ்ச்சியொன்று அவரெதிரே சற்று தூரத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது.

திடீரெனப் பெருங்கூச்சல், மக்கள் சினத்துடன் எழுப்பிய அவதூறுவார்த்தை. லேசாக அடிதடி, இத் தனையும் அவருடைய தியானத்தைக் கலைக்கவில்லை யானாலும், பக்கத்திலிருந்த ஆண்டானும், இதர சிஷ்ய கோடிகளும் ''ஸ்வாமி! ஸ்வாமி! அதோபாருங்கள்'' என்று இரைந்தே விண்ணப்பித்துக் கொண்டார்கள். அதனால் கண்விழித்த எம்பெருமானார் எதிர்சாரியை கவனித்தார்.

அங்கு மல்லனான தனுர்தாஸன் பொன்னாச்சியை கூட்டத்திலிருந்து காக்க சுற்றிலுமிருந்தவர்களை இடித்துத் தள்ளிக் கொண்டிருந்தான். அவளுடைய தளிர்க்கால்களை மணலின் உஷ்ணத்திலிருந்து காக்க தனது பட்டு அங்க வஸ்திரத்தை அவள்காலுக்கு நடைபாவாடையாகப் போட்டு அதன் மீது அவளை நிற்கச் செய்தான். பட்டுக் குடை விரித்து அவள் தலைக்கு சூரிய உஷ்ணத்திலிருந்து பாதுகாப்பு அளித்துக்கொண்டிருந்தான். அவள் கண்களையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். அவள்மட்டும் கரம் குவித்துக்கொண்டு கருடாருடனான பெருமாளை சேவித்துக் கொண்டிருந்தாள். வில்லிதாசன் பெருமாளைத்திரும்பியும் பார்க்கவில்லை. இந்த விந்தையை நீண்டநேரம் கவனித்துக் கொண்டிருந்த எம்பெருமானார் பக்கத்திலிருந்த ஆண்டானை நோக்கி இவன் யாரென்று விசாரித்தார்.

''ராஜமல்லன் வில்லிதாசன்'' என்றார் ஆண்டான்.

''அவனை நமது மடத்துக்கு அழைத்துவா'' என்று ஆஜ்ஞாபித்தார் உடையவர்.

''எதற்கு ஸ்வாமீ'' என்று ஆண்டான் கேட்டார்.

''முன்பொருநாள் ஏகாக்ரசித்தனாக இருக்கவேண்டியதைப்பற்றிக் குறிப்பிட்டேனல்லவா'' என்று உடையவர் சாதித்தார்.

''ஆம்'' என்றார் ஆண்டான்.

''அவனை அழைத்து வா'' என்று கூடமாகச் சொன்னார் எம்பெருமானார். மீண்டும் அவருடைய அருட்கண்கள் வில்லிதாசனை நோக்கின.

(தொடரும்)

# காழிச்சீராம விண்ணகரம்

**செல்வங்களைக் கொடுத்த செம்மல்:** பல இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு கோயில் கொண்டுள்ள எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்து அவர்களை வாழ்வித்தவர் நம் திருமங்கையாழ்வார். இவர் நமக்குப் பல திவ்யதேசங்களைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார். நாம் திவ்யதேசங்களாகிற செல்வங்களைப் பெற்று இப்போதும் மகிழ்கிறோம்.

# ஸ்தலசயனத்துறைவார்

நாம் திவ்யதேசங்களை நினைக்கும் போதெல்லாம் திருமங்கை மன்னனை (ஆழ்வாரை) போற்றாமல் எப்படி இருக்கமுடியும்! திருமங்கையாழ்வார், மற்றவர்களால் செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் சென்றிருக்கிறார்! எப்படிச் சென்றாரோ! எம்பெருமானே வழிகாட்டியாக இருந்து அழைத்துச் சென்றிருக்க வேண்டும். அப்போது நாம் இருந்து ஸேவிக்கவில்லை. இப்போது (அர்ச்சாவதார உருவத்தில் இருக்கும்) திருமங்கையாழ்வார் திருநாங்கூர் திவ்யதேச எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்வதை ஸேவிக்கலாம். இந்த உத்ஸவம் ஒவ்வோராண்டும் தை மாதத்தில் நடைபெறுகிறது. தைமாதத்தை மங்களாசாஸன மாதம் என்றே கூறிவிடலாம். சீர்காழி என்ற சொல்லைக் கேட்டவுடன், இவ்வூருக்கு அருகிலுள்ள குறையலூரில் அவதரித்த செல்வச் செம்மல் நம் கலியன் (திருமங்கையாழ்வார்) தானே நினைவுக்கு வருகிறார்! நெஞ்சையும் கண்ணையும் விட்டகன்றிடாது கலியன் ஆணை ஆணையே.

**தவிட்டுத்தாடாளன்:** திருஞானசம்பந்தர் சைவசமயாசிரியர். இவர் மிகப் பெருமைபெற்று சீர்காழியில் வாழ்ந்த காலம்! திருமங்கையாழ்வார் பரிவாரங்களோடு திவ்யதேச

யாத்திரையாக எழுந்தருளிக் கொண்டிருந்தார். சீர்காழிக்கும் வந்தார். இவரோடு வந்தவர்கள், 'நாலுகவிப் பெருமாள் வந்தார்' 'சிங்க ஏறனைய கலியன் வந்தார்,' என்பது போன்ற விருதுகளைக் கூறிக்கொண்டு வந்தார்கள். ஞானசம்பந்தர் இருக்கும் இவ்விடத்தில் பிறர்விருதுகளை முழங்கிக்கொண்டு செல்லக்கூடாது' என்று ஞான சம்பந்தரின் சிடர்கள் தடுத்து விட்டார்கள். ஆழ்வார் 'ஞானசம்பந்தரோடு வாதம் செய்யத்தொடங்கினர். உமது கவித்திறனைக்காட்ட ஒரு பாடல் பாடும், என்று சம்பந்தர் கூறி 'ஒரு குறள்' என்று தொடங்கிக் கொடுத்தார். 'ஒரு குறளாய்' என்று ஆரம்பித்து திரிவிக்கிரமன் வரலாற்றைப் பாடிமுடித்தார். ஞானசம்பந்தர் ஆழ்வாரின் கவித்திறனை வியந்து 'உமக்கு இந்த விருதுகள் தகும்' என்று பாராட்டித் தன்னிடம் இருந்த வேலினை காணிக்கையாக அளித்தார்; பிறகு உபசரித்து வழியனுப்பினர்.

ஆழ்வார் ஞானசம்பந்தரோடு வாதப்போர்செய்யச் செல்லும்போது, வைணவத்தில் ஊன்றியவளும், ஆழ்வாரிடம் பக்தி கொண்டவளுமான வயது முதிர்ந்த பெண்மணி ஒருத்தியைக்கண்டார். அவள் தன் வீட்டில் தவிட்டுப் பானையில் வைத்துப் பூஜித்திருந்த தாடாளப்பெருமானை ஆழ்வாருக்கு அளித்து வாழ்த்தி வழி அனுப்பினள். ஆழ்வார் அந்தப் பெருமானை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு சென்று தான் ஞானசம்பந்தரை வாதப்போரில் வென்றார். பிறகு இவரைச் சீர்காழியில் பிரதிஷ்டை செய்து, சீர்காழியைக் காழிச்சீராம விண்ணகரம் ஆக்கினர். இந்தத் தவிட்டுத் தாடாளன் இப்போதும் மூலவரோடு மிகச்சின்னவராக எழுந்தருளி இருக்கிறார் என்றும் கூறுகிறார்கள். ஜ்யேஷ்டாபிஷேகத்தன்றே இவரை ஸேவிக்க முடியுமாம்! இந்த வரலாறு இன்றும் தாடாளன் ஸன்னிதி விமானத்தில் சிற்பமாகச் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

**தெட்டபழம் போடு!** எம்பெருமானர் (ஸ்ரீராமாநுஜர்) 'ஒருகுறளாய்' என்ற இப்பதிகத்தை காலக்ஷேபமாக ஒரு

சமயம் ஸாதித்தார். இதில் 'தெட்டபழம்...சேர்மினீரே' என்று ஓரடி வருகிறது. தெட்டபழம் என்றால் என்ன வென்று ஒரு சிடர் கேட்டார். தெட்ட என்ற சொல்லுக் குரிய பொருளைப் பிறகு கூறுவோம் என்றருளிச் செய்தார். பிறகு ஒருநாள் இந்தத் திவ்யதேசத்தின் சோலை வழியே வந்தார். அப்போது சிலசிறுவர்கள் மரத்தின் மீதேறி நாவற்கனிகளைப் பறித்துக் கொண்டிருந்தனர். கீழே இருக்கும் சிறுவர் தெட்டபழமாகப் பறித்துப்போடு என்றனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீராமாநுஜர் சிறுவர்களிடம் சென்றார். 'பிள்ளாய்! தெட்டபழம் என்றால் என்ன? என்று கேட்டார். 'கனியப் பழுத்தபழம்' என்று சிறுவர்கள் கூறினர். எம்பெருமானார் திருவுள்ளமுவந்தார். இது ஒரு திசைச்சொல் போலும்! என்று எம்பெருமானார் அருளிச் செய்ததாகப் பெரியோர் கூறுவர்.

**சிரஞ்ஜீவி உரோமசர்.** மற்றவர்களின் ஆயுளைக் காட்டிலும் பிரமனுக்கு ஆயுள் மிகுதி. இதனால் பிரமன் செருக்குண்டிருந்தான். உரோமச முனிவர் இவனைவிட நீண்ட ஆயுளைப்பெற்ற வகையில் பிரமனின் கர்வத்தை அடக்கினார்.

உடல் முழுதும் அடர்ந்த மயிர்களையுடைய முனிவரே உரோமசர். இவர் உலகில் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்து பகவானை தியானிக்க விரும்பினார். ஒரு புண்ணிய நதிக் கரையில் கடுந்தவம் புரிந்தார். ஸ்ரீமந்நாராயணன் முனிவரின் எதிரில் தோன்றினான்; 'முனிவரே! நீர் விரும்பு வதைக்கேளும்' என்றான். 'இந்த உடம்போடு உன்னை வெகு நாட்கள் வழிபட வேண்டும்; பல்லாயிரம் பிரம்மாக்களின் ஆயுளை எனக்குக் கொடுத்தருள்க' என்று முனிவர் வேண்டினார். முனிவரே! பிரம்மாவின் நீண்ட ஆயுளைப்பற்றி உமக்குத்தெரியுமா; ஒரு பிரம்மாவின் காலம் முடிந்தால் உம்முடைய உடலிலிருந்து ஒரு உரோமம் கீழே விழும். உமது சரீரத்திலிருந்து எல்லா உரோமங்களும் (மயிர்களும்) கீழே விழும் வரை நீர் வாழலாம்' என்று பகவானும் வரம் கொடுத்துச் சென்றான். 'சதுர்முகனின் ஆயுஸ்ஸின் மிகுதி

யாதுண்டான துர்மானத்தை ஆசாரப்ரதனான ரோமச பகவான் தவிர்த்து அருளினான்' என்று பெரியவாச்சான் பிள்ளை அருளுகிறார். இதையே திருமங்கையாழ்வார் 'நான்முகன் நாள் மிகைத்தருக்கை, இருக்கு வாய்மை நலமிகு சீர் உரோமசனால் நவிற்றியவர் (தாடாளன்) எந்தை' என்றார்.

**மீளாத ஊராம் அவ்விண்ணகரம்:** இன்பம் தரும் உலகங்கள் இரண்டு. சுவர்க்கம் ஒன்று; மற்றொன்று பரமபதம். சுவர்க்க இன்பம் நிலையானது அன்று; பரமபதத்தில் பகவானை அடைந்து அநுபவிக்கும் இன்பமே நிலையானது. சுவர்க்கம் சென்றவர் மீண்டும் பூமிக்குவருவர்; பரமபதம் சென்றவர் திரும்பார். உடலைப் பெற்ற வாய்ப்பைக் கொண்டு நல்வினை செய்யவேண்டும்; ஆனால் பாவங்களையே செய்கிறோம். இப்பிறவியில் நன்மை தீமைகளைச் செய் கிறோம்; இவை பல பிறவியில் தொடர்ந்து வந்து உயிருக்கு தன்மைகளை அளிக்கின்றன. அதற்காக மீண்டும் பூமியில் பிறக்கிறோம். இவ்விரு வினைகளையும் வென்றால் என்ன? வெல்லமுடியாதா? காழிச்சீராம விண்ணகரம் (சீர்காழி தாடாளன் ஸந்நிதி) செல்லுங்கள் இங்குச் சென்று ஒரு முறையேனும் தாடாளனை வணங்கினால்தான் மோட்சம் கிடைக்கும். திருவரங்கத்தில் மிக்க ஈடுபாடுகொண்ட பிள்ளைப்பெருமாள் ஐயங்காருக்கு எல்லா ஊர்களும் அரங்கமாகவே தோன்றும். எந்த எம்பெருமானைச் சொன்னாலும் அவ்வுரை ஆராமம் சூழ்ந்த அரங்கனையே சேரும் என்று திருவுள்ளம். அதனால் தொல்லரங்கர் சீராம விண்ணகரம்' என்றார். ஸ்ரீராமன் இருப்பதால் இவ்வூர் (சீர்காழி) சீராம விண்ணகரம் என்று பெயர் பெற்றதாகவும் கூறுவார்கள். தாடாளன் ஸந்நிதிக்குச் செல்லுங்கள்; அவனை வணங்குங்கள்.

**செல்லுந்தொறு முயிர்ப்பின் செல்லுமிருவினையை**
**வெல்லுமுபாயம் விரும்புவீர்— தொல்லரங்கர்**
**சீராம விண்ணகரம் சேர்மின், பின்மீளாத**
**ஊராம் அவ்விண்ணகர் உண்டு.**

# ஸ்ரீமத் பகவத் கீதை

## இரண்டாம் அத்யாயம்

**அவிநாசிது தத்வித்தி யேநஸர்வமிதம் ததம்**
**விநாச மவ்யயஸ்யாஸ்ய நகஃச்சித் கர்துமர்ஹதி (17)**

எந்த ஆத்மவஸ்துவினுலே இவையாவும் வ்யாபிக்கப் படுகின்றனவோ அத்தகைய ஆத்மவஸ்து அழியாததென்று தெரிந்துகொள்; பிறபொருள் ஒன்றும் அழியாததான இந்த ஆத்மவஸ்துவினுடைய விநாசத்தைப் பண்ண வியலாது என்பதாம்.

முன் சுலோகத்தில் ஆத்மவஸ்துவிற்கு அழிவில்லை என்பதைக் கண்ணபிரான் தெரிவித்தான்; அது எப்படி! என்ற கேள்வி பிறந்தது: அதற்கு விடையாக இந்த சுலோகம் அமைகின்றது.

---

R. வேங்கடராமாநுஜன்

---

ஒருவன் நேற்றைய தினம் பிறந்தான் இன்றைய தினம் இறந்தான் என்பது உலக வழக்காகக் காண்கிறது. வேதத்திலும் ஆத்மவஸ்து பிற பூதங்களில் நின்றும் தோன்றி அவை அழியும் பொழுது அவற்றுடன் அழிகின்றது என்று கூறப்பட்டுள்ளது; இதனுல் ஆத்மவஸ்து தோன்றி அழியும் பொருள் என்பது தெரிகிறது; இவ் வாறுகவுள்ள ஆத்மவஸ்து அழியாதது என்பது எங்ஙனம்? என்ற கேள்வி பிறந்தது; அதனுல் ஆத்மவஸ்து அழியாதது என்று இதில் தெரிவிக்கின்றுன். இங்குள்ளது என்பது வேறுபாட்டினை உணர்த்துகின்றது.

ஆத்மவஸ்து மிகச்சிறிய பொருள்; இதனை அணுவென்று சாஸ்த்ரம் தெரிவிக்கின்றது; ஞானத்திற்கு இருப்பிடமானது; எள்ளினுள் எண்ணெய் போல மற்றைப் பொருள்கள் எல்லாவற்றிலும் புக்குப் பரந்திருக்கும் தன்மை வாய்ந்தது; ஆதலால் இது வ்யாபகம் எனப்படும்; எனவே இது அழிவில்லாதது என்பதை இந்த சுலோகத்தின் முற்பகுதி

யால் தெரிவிக்கின்றான். பிறபொருள் இதனால் வ்யாபிக்கப்படுகின்றதால் அது வ்யாப்யம் எனப்படும்; வ்யாப்யமான பொருள் வ்யாபகத்தை அழித்தல் செய்யாது என்பதை அறிகின்றோம். ஆகாசம் வ்யாபகம்; அதனால் வ்யாபிக்கப்பட்ட பொருள் அதனை அழிக்க வியலாது என்பது ப்ரசித்தம்; உள்நுழையும் நுண்ணிய பொருளே நுழையப்படும் பருப்பொருளை நாசம் செய்யும். உதாரணமாக கத்தி நெருப்பு நீர் காற்று ஆகியவற்றை எடுத்துக் கொள்ளலாம். இவை நுண்ணிய பொருள்கள்; பிறவற்றில் நுழைந்து அவற்றை அழிக்கின்றன; ஆகவே கத்தி முதலானவை நாசகங்கள் எனப்படும்; பிற பொருள்கள் நாச்யங்கள் எனப்படும். நாச்யங்களான பொருள்கள் நாசகங்களை அழிக்கமாட்டா. அது போலவே மிக நுண்ணிய பொருளான ஆத்மவஸ்துவை அதனிற்காட்டிலும் பருப்பொருளான மற்றொன்று அழித்தல் செய்யாது என்பதைப் பிற்பகுதியால் தெரிவிக்கின்றான் என்பது இதனுடைய தேர்ந்த பொருள் ஆம்.


Anything & Everything in
Real Estates

(Buying & Selling Properties)
Civil Constructions
Please Contact

MINERVA ENTERPRISES

2, Narayanan Street.
Mahalingapuram,
Nungambakkam MADRAS-600 034.

# சங்ககாலத் தமிழர் சமயம்

ஸ்ரீ உ. வே. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் M.A.B.L.,
"ஸ்ரீ வைஷ்ணவஸுதர்சனம்" ஆசிரியர்

## 1. உலகனைத்தையும் படைத்தளித்தழிக்கும் ஏகக்காரணன் யார் ?

திருமாலைப் போற்றுவதான இரண்டாவது பரிபாடலில் கீரந்தையார் என்னும் சங்ககாலச் சான்றோர்—உபநிஷத்துக்களில் சொல்லப்பட்ட முறையிலே பிரளய காலத்தையும், அதைத் தொடர்ந்து வரும் ஸ்ருஷ்டி காலத்தில் மூலப்ரக்ருதியிலிருந்து ஆகாசமும், 'அதிலிருந்து காற்றும், அதிலிருந்து தீயும், அதிலிருந்து புனலும், அதிலிருந்து நிலமும் முறையே படைக்கப்பட்டதையும் விரிவாக வர்ணிக்கிறார். இப்படிப் படைத்தவன் யார் என்னும் கேள்வியெழ **'கேழல் திகழ்வரக் கோலமொடு பெரிய ஊழி ஒருவினை உணர்த்தலின், முதுமைக்கு ஊரு யாவரும் உணரா. ஆழி முதல்வ! நிற் பேணுதும், தொழுது'** என்று சுவேதவராஹ கல்பத்தின் ஆதியிலே சுவேதவராஹ உருவோடு பிரளய ஜலத்திலிருந்து பூமியை எடுத்து நிலைநிறுத்திய திருமாலே எவராலும் தன் முதுமையைக் காணமுடியாத அந்த மூல முதற்பொருள் என்று முழங்குகிறார். இங்கு 'படைக்கும் தொழிலைப் பிரமனும், அழிக்கும் தொழிலைச் சிவனும் செய்வதாகச் சாத்திரங்களிலும் உலகத்திலும் பிரசித்தியிருக்கும் போது, முத்தொழிலையும் செய்பவன் திருமாலே என்று கூறுவது பொருந்துமோ?' என்னும் ஐயம் சிலர்க்கு எழக்கூடும். திருமாலைப் புகழும் முதற்பரிபாடலைப் பாடிய சங்ககாலப் புலவர் இந்த ஐயத்தைப் பின்வருமாறு போக்குகிறார்

—'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று இப்பாடலில் காட்டிவரும்போது **"பூவனும் நாற்றமும் நீ"** [பூவில் பிறந்த பிரமனும், அவன் செய்யும் படைப்புத் தொழிலும் உன்னை நிலையே] என்றும், **"ஐந்தலை உயரிய அணங்குடை அருந் திறல் மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ"** [ஐந்து தலைகளை உடையவனும், இந்திரன் முதலான தேவர்களைக் காட்டிலும் உயர்ந்தவனும், பகைவர்க்கு அச்சத்தை விளைப்பவனும், மிக்க வீர்யத்தையும் பலத்தையும் உடையவனுமான சிவனும், அவன் செய்யும் அழிக்கும் தொழிலும் உன் அநிலையே] என்றும் பிரமனும் சிவனும் செய்யும் படைக்கும் தொழிலும் அழிக்கும் தொழிலும் அவர்களுக்குள்ளிருந்து திருமால் செய்வதே என்று காட்டுகிறார். அதே பாடலில் **'இருவர் தாதை'** என்று 'பிரமனையும் சிவனையும் படைத்தவனே!' என்று திருமாலை விளிக்கையாலே அவனே அனைத்துலகுக்கும் காரணமான பரம்பொருள் என்று எடுத்துக் காட்டுகிறார். **"இன்னோர் அனையை இனையையால் என அன்னோர் யாம் இவண் காணாமையின் பொன் அணி நேமி வலம் கொண்டு ஏந்திய மன்னிய முதல்வனை ஆதலின் நின்னோர் அனையை நின் புகழொடும் பொலிந்தே!"** [நீ இன்னாரை ஒத்தவன், இத்தகையவன் என்று உனக்கு உவமை சொல்லும்படி எவரையும் காணாமையால், பொற்சக்கரத்தை ஏந்திய நீயே நிலைநின்ற ஜகத்காரணனாய், எல்லா குணங்களோடும் கூடியிருக்கையால் தானே தனக்குவமனாயிருக்கின்றாய்] என்று கூறுவதன் மூலம் பிரமன், சிவன் முதலான எவரும் இவனுக்கு ஒத்தவர்கள் அல்லர் என்றும், தனக்குவமை இல்லாதானாய், அவர்களனைவரையும் படைத்த நிலைநின்ற ஜகத்காரணன் இவனே என்றும் மிகத்தெளிவாகக் காட்டுகிறார். மூன்றாம் பாடலில் கடுவன் இளவெயினனார் என்னும் சங்ககாலச் சான்றோர் **'தீ வளி விசும்பு நிலன் நீர் ஐந்தும், ஞாயிறும், திங்களும் அறனும், ஐவரும் திதியின் சிறாரும் விதியின் மக்களும், மாசுஇல் எண்மரும் பதினொரு கபிலரும் தாமா இருவரும் தருமனும், மடங்கலும், மூ-ஏழ் உலகமும்,**

**உலகினுள் மன்பதும் மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர வலந்து! வாய்மொழி ஓடை மலர்ந்த தாமரைப் பூவினுள் பிறந்தோனும் தாதையும் நீ என மொழியுமால், அந்தணர் அருமறை''** [ஐந்து பூதங்களும், சூரியசந்திரர்களும், யாகம் செய்பவனும், மற்ற ஐந்து கிரகங்களும், அசுரரும், பன்னிரு ஆதித்யர்களும், எட்டு வசுக்களும், பதினொரு உருத்திரரும், அசுவினி தேவர்களும், யமனும், கூற்றமும், எல்லா உலகங்களும், அவ்வுலகிலுள்ள உயிர்களும், மாயோனாகிற உன்னிடமிருந்தே உண்டானவர் என்பதை அழியாத வேதம் சொன்னபடி முறை தப்பிச் சொன்னேம். வேதமாகிற ஓடையிலே மலர்ந்த (வேதத்தால் ஓதப்பட்ட) தாமரைப் பூவில் பிறந்தவனாகிற பிரமனும் நீ என்றும், அவனுக்குத் தந்தையும் நீ என்றும் அந்தணர் ஓதும் அருமறைகள் முழங்குகின்றன.] என்று உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் திருமாலிடமிருந்தே உண்டாயின என்றும், படைப்புக் கடவுளாகப் பிரசித்திபெற்ற பிரமனையும் உந்தித் தாமரையில் படைத்து, மற்ற பொருள்களை அவனுக்கு அந்தர்யாமியாயிருந்து திருமாலே படைக்கிறான் என்றும் வேதங்கள் ஓதுகின்றன என்று தெளிவாகக் காட்டுகிறார். '**பதினாயிரம் கை முதுமொழி முதல்வ!** என்று புருஷஸூக்தம் முதலான வேதப் பகுதிகளிலே கணக்கற்ற கைகளையுடைய ஜகத்காரணப் பொருளாக ஓதப்படுபவன் இவனே என்று காட்டுகிறார். ''**இனைத்து என எண்வரம்பு அறியா யாக்கையை**'' என்று உலகிலுள்ள கணக்கற்ற பொருள்களனைத்தையும் தன் சரீரமாகக் கொண்டிருப்பவனாகையாலே இவனே ஜகத்காரணப் பொருளாயிருக்கமுடியும் என்று நிரூபிக்கிறார். ''**முன்னை மரபின் முதுமொழி முதல்வ!**'' என்று அனாதிகாலமாக ஓதியும், ஓதுவித்தும் பரவுகின்ற முதுமொழியாகிய வேதத்தில் ஜகத்காரணனாக ஓதப்படுபவன் திருமாலே என்று முழங்குகிறார், ''அமரர்க்கு முதல்வன் நீ...அவுணர்க்கும் முதல்வன் நீ'' என்று பறை சாற்றுகிறார். '**காலமுதல்வனை;**

**ஏஎ இன கிளத்தலின் இனைமை நற்கு அறிந்தனம்''** [சாம வேதம் காலத்துக்கும் காரணமாயிருப்பவன் என்று உன்னைக் கூறுகையாலே நாங்கள் அப்படித் தெரிந்து கொண்டோம்.] என்று சாமவேதத்தைப் பிரமாணமாகக் காட்டி, திருமாலைக் காலமுதல்வன் என்று பறைசாற்றுகிறார். **'முதல்முறை இடைமுறை, கடைமுறை தொழிலின் பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோரிலையே''** என்று முதலில் செய்யப்படும் படைப்புத் தொழில், நடுவில் செய்யப்படும் காத்தல் தொழில், முடிவில் செய்யப்படும் அழித்தல் தொழில் என்னும் முத்தொழில்களையும் செய்வதற்காகத் திருமால் எல்லாப் பிறப்புக்களையும் எடுக்கிறான் என்றும், அப்படி அவன் பிறக்கும்போது தன் விருப்பத்தால் பிறக்கிறானேயொழிய இவனைப் பிறக்கச் செய்தவர்கள் எவருமில்லை என்றும் முழங்கி, முத்தொழில்களையும் செய்யும் தனிமுதல்வன் இவனே என்று பறைசாற்றுகிறார். **''இரு நிழல் படாமை மூ-ஏழ் உலகமும் ஒரு நிழல் ஆக்கிய ஏமத்தை மாதோ!''** என்று எல்லா உலகையும் ஏகசக்ராதிபதியாக ஆள்பவன் திருமாலே என்று முழங்குகிறார். **''பாழ் என, கால் என, பாகு என, ஒன்று என, இரண்டு என, மூன்று என, நான்கு என, ஐந்து என, ஆறு என, ஏழு என, எட்டு என, தொண்டு என நால்வகை ஊழி எண் நவிற்றும் சிறப்பினை''** என்று இருபத்தைந்து தத்துவங்களுக்கும் அந்தர்யாமியாயிருந்து அவற்றைப் படைப்பவன் திருமாலே என்று காட்டுகிறார். **''மாயா மன்ன! உலகாள் மன்னவ!''** என்று என்றும் அழியாத ஸர்வலோக சக்ரவர்த்தி இவனே என்று விளம்புகிறார். **'மா நிலம் இயலா முதல்முறை அமையத்து நாம வெள்ளத்து நடுவண் தோன்றிய வாய்மொழி மகனொடு மலர்ந்த தாமரைப் பொருட்டு நின் நேமி நிழலே''** என்று பிரளய காலத்தில் எல்லாப் பொருளும் பரமாத்மாவான தன்னோடு ஒன்றிக்கிடந்தபோது பிரமனை முதலில் உந்தித் தாமரையில் படைத்தவன் திருமாலே என்று முழங்குகிறார். கடுவன் இளவெயினனார் தம் நான்காம் பரிபாடலில்

**"நின்னில் தோன்றிய நிரை இதழ்த்தாமரை ..நின் ஓர் அன் ஓர் அந்தணர் அருமறை"** என்று உலகத்துக்குக் காரணமான தாமரை திருமாலிடமிருந்தே தோன்றிற்று என்று—தேவிற் சிறந்த திருமாலைப்போலே நூலிற் சிறந்த அந்தணர் அருமறை ஓதுகிறது என்று உணர்த்தினார். முருகனைப் பற்றியதான எட்டாம் பரிபாடலில் ஆசிரியர் நல்லந்துவனாரும் **"அவிழ்துழாய் மலர் தரு செல்வத்துப் புள்மிசைக் கொடியோனும், புங்கவம் ஊர்வோனும், மலர்மிசை முதல்வனும்"** என்று மும்மூர்த்திகளையும் குறிக்கும்போது மலர்ந்த துழாய் மாலையையும், உந்தித் தாமரை மலரில் தோன்றிய ஸகலலோகக்களாகிற செல்வத்தையும், உயர்ந்த கருடக் கொடியையும் உடையவன் என்று திருமாலைச் சிறப்பிக்கையாலும், 'மலர்மிசை முதல்வன்' என்று பிரமனைத் திருமாலின் உந்தித் தாமரையில் முதலில் பிறந்தவன் என்று குறிக்கையாலும், சிவனை 'புங்கவம் ஊர்வோன்' என்று வாகனத்தையிட்டும், அடுத்து 'ஆதிரை முதல்வன்' என்று நட்சத்திரத்தையிட்டுமே குறிக்கையாலும் திருமாலே மற்ற இரு மூர்த்திகளுக்கும் காரணமான கடவுள் என்று உணர்த்தினார்.

திருமாலைப் பற்றிய பதின்மூன்றும் பரிபாடலின் நல்லெழுதியார் என்னும் சங்ககாலப்புலவர் **"முடிந்ததும் முடிவதும் முழ்கிப்பதும் அவை மூன்றும் கடந்து, அவை அமைந்த கழலின் நிழலவை"** [கழிகாலம், நிகழ்காலம், வருங்காலம் எனப்படும் மூன்று காலங்களையும் கடந்தவன் நீ. அக்காலங்கள் வந்து தங்கியிருக்கும் திருவடி நிழலையும் உடையவன் நீ] என்று திருமாலே காலத்தைக் கடந்தவன், காலத்துக்கும் முதல்வன் என்று காட்டினார். **"ஒருமை வினை மேவும் உள்ளத்தினை"** என்னும் பகுதியினாலே திருமால் முத்தொழிலையும் செய்யும் முதல்வனானாலும், காத்தல் தொழிலிலேயே அவன் திருவுள்ளம் பொருந்தியிருக்கிறது எனக்காட்டினார்.

பரிபாடல் திரட்டில் எட்டாம் பாடலில் '**மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்பூ**'' என்றும், ''**பூவினுள் பிறந்தோன் நாவினுள் பிறந்த நான்மறைக் கேள்வி**'' என்றும் மாயோனாகிற திருமாலின் உந்தியிலேயே உலகனைத்துக்கும் ஆதாரமான தாமரை மலர்ந்தது என்றும், பிரமனும் அப்பூவினுள் பிறந்தவனே என்றும் கூறுகையால் திருமாலே முழுமுதல்வன் என்று விளங்குகிறது.

பத்துப்பபாட்டிலுள்ள பெரும்பாணாற்றுப்படையில் 402-வது அடி தொடங்கி ''**நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ் நான்முக ஒருவற் பயந்த பல் இதழ்த் தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி**'' என்று நீலநிறத்து நெடியவனாகிற திருமாலது உந்தித்தாமரையிலிருந்தே நான்முகன் படைக்கப்பட்டான் என்னும் இவ்விஷயம் வலியுறுத்தப் பட்டது.

பத்துப்பாட்டில் ஒன்றான மதுரைக்காஞ்சியில் 54-வது அடி தொடங்கி '**நீரும் நிலனும் தீயும் வளியும் மாகவிசும்போடு ஐந்து உடன் இயற்றிய மழு வாள் நெடியோன் தலைவன் ஆக**'' என்று பரசுராமாவதாரத்தில் மழுவையும், எல்லா உருவங்களிலும் நாந்தகம் என்னும் வாளையும் ஏந்தியவனாய், உலகளந்தவனாகையாலே நெடியோன் என்று கூறப்படுபவனான திருமாலே உலகனைத்தையும் படைத்த பரம்பொருள் என்று முழங்கப் பட்டது.

ஆக, சங்க இலக்கியங்கள் அனைத்திலும் திருமாலே உலகனைத்தையும் படைத்தளித்தழிக்கும் முழுமுதல்வன் என்று காட்டப்பட்டது என விளங்குகிறது. இந்தப் பெருமை வேறு எந்த தெய்வத்திற்கும் ஓரிடத்திலும் காட்டப்படவில்லை.

(தொடரும்)

# இராமாயணச்
# சுவையமுதம்

**வித்வான்:** உலகில் ஒன்றிரண்டு கலைகள் கற்றவரை வித்வானென்கிறோம். பெருமாள்படி அப்படியோ?* வேத வேதாங்கதத்வஜ்ஞ: சதுர்வேதே ச நிஷ்டித:. ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வஜ்ஞ: ஸ்ம்ருதிமாந் ப்ரதிபாவாந்* என்று மேலே நாரதமஹர்ஷி விடை கூறும்படியன்றோ பெருமானுடைய வைதுஷ்யமிருப்பது.

**ஸமர்த்த:** 'வித்வாந் க:' என்கிற வினவுக்கு அடுத்தபடி 'ஸமர்த்த: க: என்னுமிவ்வினா தோன்றியிருப்பதனால் வித்வத்து வேறு, ஸாமர்த்தியம் வேறு என்பது பெறப்படும். மேலே (அயோத்யா.) *லௌகிகே ஸமயாசாரே க்ருதகல்போ விசாரத:* என்று சொல்லுகிறபடியே லௌகிக ஸாமர்த்தியமும் விஞ்சியவர் பெருமான்.

## ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்
# அண்ணங்கராசாரியர்ஸ்வாமி

**ஏகப்ரியதர்சந:** எவ்வளவுகாலம் பார்த்துக்கொண்டிருந்தாலும் தெகுட்டாமல் இனிமையே செல்லும்படியான பார்வையை யுடையவர் பெருமான். அரண்யவாஸிகளான முரட்டாண்களையும் கவரவல்ல அழகு படைத்தவர். **"தருணௌ ரூபஸம்பந்நௌ"** என்று வையவந்த வாயாலும் வாழ்த்தவேண்டும்படியான ரூபலாவண்யமமைந்தவர்.

**ஆத்மவாந்** ஆத்மாவையுடையவன் ஆத்மவாந். **ஆத்மா** என்னுஞ் சொல்லுக்கு வடமொழி நிகண்டுக்களில்

ஐந்து பொருள்கள் கூறப்பட்டுள்ளன; ''ஆத்மா ஜீவேத்ர்தெள தேஹே ஸ்வபாவே பரமாத்மநி'' என்றது காண்க. த்ருதியாகிற தைர்யமுடைமையை இங்குக் கொள்ளலாம்: ''ஜய ஜய மஹாவீர!'' என்றவுடனே ''மஹாதீர தெளரேய!'' என்றும் 'அநபாயஸாஹஸ!' என்றும் போற்றத் தக்க தைரியமுடையவர் பெருமான்.

**ஜிதக்ரோத:** கோபத்தை வென்றவர் என்று பொருள். கோபமில்லாதவரென்று பொருளன்று; கோபத்தை வெல்வதாவது அதனை ஸ்வாதீனப்படுத்தி வைத்துக் கொள்ளுகை. எப்பொதும் கோபிஷ்டர்களாகவேயிருப்பதும், கோபம் அடியோடு இல்லாமலிருப்பதுமாகிய இரண்டும் தவறு. கோபத்தைக்காட்டிக் காரியங் கொள்ள வேண்டிய ஸமயங்களில் மட்டும் கோபத்தை வரவழைத்துக்கொள்வதும், காரியம் ஆனவாறே அக்கோபம் போனவிடம் தெரியாதபடி செய்துகொள்வதும் உத்தம புருஷ லக்ஷணம்.

**த்யுதிமாந்:** த்யுதியாவது காந்தி; அதனை யுடையவர். கீழ் ''ஏகப்ரியதர்சந: க:!'' என்று வினா நிகழ்ந்திருக்கச் செய்தேயும் இங்கு 'த்யுதிமாந் க:?' என்று வினவியிருப்பதனால் இதில் ஒரு மருமமறியத் தக்கது. ''வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி'' என்கிறபடியே ஸௌர்யகுலத்தில் அவதரித்த பெருமான் *ராமதிவாகர:* என்னும்படி தாமும் ஸூர்யனாயிருப்பதால் ஸூர்யன் ப்ரபையை விட்டுப் பிரியாதிருப்பதுபோல ''ப்ரபாவாந் ஸீதயாதேவ்யா பரமவ்யோம:'' என்கிறபடியே ப்ரபாஸ் தாநீயையான ஸீதா பிராட்டியை விட்டுப் பிரியாதவர் என்பது உட்பொருள். ''அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா'' என்றும் ''அநந்யாஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா'' என்றும் இவ்வ தம்பதிகளிருவரும் பேசும்படியான நித்யயோகமுடைமை.

**அநஸூயக** நற்றங்களையும் குற்றமாகக் கொள்ளுகைக்கு உறுப்பான துர்க்குணம் அஸூயை. அஃதில்லாமை—குற்றங்களையும் நற்றமாகக் கொள்ளுகை. ஆக வாத்ஸல்யமுடையவர் என்றதாகத் தேறும். ''சரணாகத வத்ஸல:'' என்றும் ''ரிபூணாமபி வத்ஸல:'' என்றும் போற்ற நின்றவர் பெருமான்.

**கஸ்ய பிப்யதி தேவாச் ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே** இப்பதினைந்து வினாக்களும் முதல் வேற்றுமையில் நிகழ்ந்து, இவ்வினா மட்டும் ஆறும் வேற்றுமையில் நிகழ்வதை நோக்குமிடத்து ''இதம்தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந. ந ச அசுச்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோப்யஸூயதி'' என்ற கீதாச்லோகம் நினைவுக்கு வரும். சதுர்த்திவிபக்தி நிர்தேசமுள்ள மூன்று பாதங்களிற் காட்டிலும் வேறுபட நான்காவது பாதம் ப்ரதமாவிபக்தி நிர்தேசத்தோடு கூடியிருக்கிறதிங்கு. அதைப் பற்றி நம் பாஷ்யகாரர் ''அஸமாந விபக்தி நிர்தேச: தஸ்ய அத்யந்த பரிஹரணீயதாஜ்ஞாபநாய'' என்று அருளியிருக்கிறார். அதுபோல இங்கும் ஒரு விசேஷம் ஜ்ஞாபிதமாக வேணும்; கீழ் ப்ரஸ்தாவித்த பதினைந்து குணங்களும் ஒரு தட்டாய், இந்த பதினாறாவது குணம் மட்டும் ஒரு தட்டாயிருக்கை. போர்க்களத்தில் முன்னிற்கும்போது சீற்றத்தின் மிகுதியை நோக்கில் அநுகூலர்க்கும் அணுகவொண்ணாதபடி யிருக்கையைச் சொல்லுகிறது. ராகவ ஸிம்ஹமன்றோ.

அஸங்க்யேய கல்யாணகுணகணங்களுக்கு நிதியாக ப்ரஸித்தனான பகவானிடத்தில் இப்பதினாறு திருக்குணங்கள் மட்டுமா வுள்ளனவென்று கேட்கலாகாது; சந்திரனை ஷோடசகலா பரிபூர்ணனென்னுமாபோலே ஸ்ரீராமசந்திரனை ஷோடச சுபகுண பரிபூர்ணனாகவைத்துப் பேசினபடி. மற்றுமுள்ள குணங்களுமெல்லாம் இவற்றினுள்ளே அடங்கியிருப்பனவாகக் கொள்க. [குறிப்பு:—இப்பதினாறு குணங்

களையும் மிகமிக விவரித்து ஸ்ரீராமாயணக் கதைகளைப் பெரும்பாலும் இவற்றிலேயிணக்கி அபூர்வ ராமாயண மென்று நாமெழுதிய நூலானது தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்க்ருதம், ஆங்கிலம் ஆகிய நான்கு பாஷைகளிலும் வெளி வந்துள்ளது.]

**இங்கு முக்கியமாகக் குறிக்கொள்ளத்தக்கதொன்று** ஸ்ரீராமாயணம் வெறும் கதை நூலன்று; ''வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தஶரதாத்மஜே । வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா ॥'' என்கையாலே வேதார்த்தங்களை வியாக்கியானிக்கவே ப்ரவ்ருத்தமானது இது. இத்தகைய மஹாக்ரந்தத்தில் திருக்குணங்களைப் பற்றின விஷயமே தலையாக அமைந்திருப்பதால் நிர்குண ப்ரஹ்மவாதம் அடியறுக்கப்படுகிறதென்றும் அது வேதபுருஷனுக்கு அநபிமதமென்றும் முக்கியமாக உணரவேணும். பரமபதத்தில் எம்பெருமான் தன்னுடைய பரத்வமொன்றையே காட்டமுடிகிறது. ஸௌலப்ய ஸௌசீல்யதயா க்ஷாந்தி வாத்ஸல்யாதி குணங்களை அங்குக் காட்ட முடிகிறதில்லை. ஏன்? அவற்றுக்கு விஷய (லக்ஷ்ய) பூதர் அங்கு ஒருவருமில்லாமையாலே. அத்திருக்குணங்கள் விலைச் செல்லவேண்டிய இவ்வுலகில் வந்து திருவதரித்தது. *குண பரீவாஹாத்மநாம் ஜந்மநாம்* என்று பட்டர் அருளிச் செய்தது இதைக்கருதியே. ஆக நிர்க்குண ப்ரஹ்மவாதிகளுக்கு ஸ்ரீராமாயணம் அனுகூலமாயிருக்கத்தகுதியில்லை. நிர்க்குணப்ரஹ்மவாதத்தை நெஞ்சிலும் நினையாதவர்களே ஸ்ரீராமாயணாதிகாரிகளென்பது வால்மீகி நாரதமஹர்ஷிகளின் கருத்து.

(தொடரும்)

# அன்புள்ள கீதாசார்யரே!

**T. S. ஸ்ரீனிவாசன்** — **விசாகப்பட்டினம்**

Madras Citizen Committee சென்னையில் நடத்தவிருக்கும் திருப்பதிப் பெருமாளின் கல்யாண உற்சவ அறிவிப்பு வைணவத்திற்கோ அல்லது அதன் வளர்ச்சிக்கோ உகந்ததாகத் தெரியவில்லை. வைணவம் ஆல்போல் தழைத்துக் கிளைக்க இது போன்ற சங்கங்கள் வைணவ நூல்களை வெளியிடுதல் ஆக்க பூர்வமான காரியமாகும்.

**J. ரங்கராஜன்** — **அண்ணன் கோயில்**

வியாபார நோக்கத்துடன் செய்யப்படும் ஒரு நிகழ்ச்சிக்கு திருப்பதி தேவஸ்தானம் ஒத்துழைப்பு தருவது வருந்தத்தக்கதாகும்.

**பார்த்தசாரதி** — **சென்னை**

வேங்கடேச கல்யாண உத்ஸவத்தைக் கண்டிப்பது சரியானதே. ஆனால் இதைப்பற்றி வாசகர்கள் கருத்தை வரவேற்று விவாதமேடை அமைப்பது சரியானதல்ல என்பது என் கருத்து.

**K. B ஸ்ரீனிவாசன்** — **காஞ்சீபுரம்**

ஸ்ரீ உ. வே. வேளுக்குடி ஸ்வாமியின் வைபவம் அப்பொழுதைக் அப்பொழுதென் ஆராவமுதமே எனும்படி இருக்கிறது. பொலிக பொலிக பொலிக!

**நாராயணன்** — **பெங்களூர்**

திருவரங்கன் உலாவைப் படிக்கும் போதே மெய்சிலிர்க்கிறது. ஒரு கோயிலைக் காப்பாற்ற வைணவர்கள் பெரும் வீரர்களாக மாறினார்கள், என்று கேட்கும்போது நெஞ்சு குளிர்கிறது. அந்நாள் மீண்டும் திரும்புமா?